# VALUE EDUCATION

# 18K1VE

# UNIT I AND UNIT II

# UNIT I

## 5 MARKS

1. விழுமக்கல்வி என்றால் என்ன? உதாரணத்துடன் விளக்குக.
2. விழுமக் கல்வியின் குறிக்கோள்கள் யாவை?
3. விழுமக்கல்வி அளிக்கப்பட வேண்டியதின் அவசியத்தை விளக்குக.
4. இந்துசமய நெறிமுறை சிறு குறிப்பு வரைக.
5. புத்த சமய கல்வி போதிக்கும் நன்னெறிகளை எழுதுக.
6. கல்வியைப் பற்றி அறிஞர்கள் கருத்துகள் யாவை?

1. **What is value education? Explain with example.**
2. **What are the aim of value education?**
3. **Explain the need for "value education"**
4. **Short notes- principles of Hinduism.**
5. **Highlight the important features of Buddha's teachings**
6. **Describe the opinion of Scholars regarding value education**.

## 10 MARKS

1. நன்னெறிகளை வகைப்படுத்துக.
2. இஸ்லாமியம் போதிக்கும் நன்னெறிகளை எழுதுக.
3. கிறிஸ்தவ மதம் மற்றும் ஜெயின மதம் போதிக்கும் நன்னெறிகளை எழுதுக.

1. **Classify moral values.**
2. **Explain teachings of Islam.**
3. **Explain teachings of Christianity and Jainism.**

## விழுமக் கல்வி

கற்பவரை மேம்பட்ட மனிதனாக்கி அவரது ஆளுமையில் உரிய மாற்றங்களை ஏற்படுத்துவதே விழுமக் கல்வியாகும். ஆளுமையின் மூன்று நிலைகளான அறிதல், உணர்தல், செயல்படுதல் ஆகிய அனைத்தும் விழுமக் கல்வியில் உள்ளடங்கும். விழுமக் கல்வி மூலம் மாணவன், நல்லது, கெட்டது, சரியானது/தவறானது என்பவற்றை பிரித்தறியும் ஆற்றலையும் அவற்றோடு தொடர்புடைய மனவெழுச்சிகளையும் பெற்று திகழ வேண்டும். விழுமக் கல்வி சிறந்த சமூக நடத்தை எவ்வாறு இருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டுகிறது. விழுமக் கல்வியை அளிப்பதற்கு சமயம் ஒரு கருவியாக /வழிமுறையாக அமையலாம். அறநெறிகளை அறிவது ஒழுக்க உணர்வுகளைப் போற்றி அதன்படி நடக்க முற்படுவது ஆகிய அனைத்தையும் மாணவனிடம் கற்பிக்க முயல்வதே விழுமக் கல்வி. விழுமக் கல்வியின் மூலம் மாணவர்களிடையே சமத்துவம், சகோதரத்துவம், சமயசார்பற்ற செயல்படுதல், ஜனநாயகம், அறிவியல் மனப்பான்மை, தான் சார்ந்த சமுதாயம் போன்றவற்றை வளரச் செய்ய முடியும். ஜனநாயகம், சமயசார்பின்மை,, அறிவியல் மனப்பான்மை, சமத்துவம், நமது பண்பாட்டு மரபை மதித்து பெருமை கொள்ளுதல், சுற்றுச்சூழலை பாதுகாத்தல் ஆகிய அனைத்தும் 1986ம் வருடம் வெளியிடப்பட்ட புதிய தேசிய கல்வி கொள்கை படி அடிப்படைகளாக கண்டறியப்பட்டுள்ளன.

## விழுமக் கல்வியின் குறிக்கோள்கள்

- முழுமையான வளர்ச்சி
- சமுதாய அக்கறை
- சமூக நலன்
- தேசிய நலன்

- உலக மனப்பான்மை
- விழிப்புணர்வு

**விழுமக் கல்வியின் அவசியம்**

- ஒழுக்கச் சிதைவு : சமுதாயத்தில் உள்ள மக்களிடம் பல்வேறு நிலைகளில் ஒழுக்க சிதைவு மிகுந்து காணப்படுகிறது.மாணவர்கள் மனித வாழ்வுக்கு அடிப்படையான மதிப்புகள் எவை என்ற உணர்வே இல்லாமல் வளர்ந்து வருகின்றனர்
- அறிவுக்கு முக்கியம் அளிக்கும் கல்வி : இன்றைய கல்வி முறையில் செய்திக்கும் தகவலுக்கும் தேர்வுக்கும் அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. ஒரு காலத்தில் கல்வியை ஒழுக்கமாகவும் ஒழுக்கமே கல்வியாகவும் இருந்துவந்தது. மேலும் அறிவு இருப்பதால் மட்டும் பண்பு வந்து விடுவதில்லை; படித்தவர்கள் பல குற்றங்களையும் பண்பாடற்ற பாவச் செயல்களையும் செய்கின்றனர் இன்று வழங்கப்படும் கல்வியில் ஒழூக்க வெறுமை காணப்படுகிறது.
- பிற்போக்கு கலாச்சாரம் : எந்த பிரச்சனைக்கும் வன்முறையால் தீர்வு கண்டுவிட முடியும் என்பன போன்ற பிற்போக்கு கலாச்சாரம் வேகமாக இளைஞர்களிடையே வளர்ந்து வருகிறது.
- சமூக அக்கறை இன்மை : இன்று மக்களிடம் தான் தன் சுகம் என்ற தன்னல போக்கு மிகுந்து வருகிறது. பிற மனிதர்களின் மேல் அக்கறை கொள்ளும் மனிதர்கள் அரிதாகி வருகின்றன.
- தேசிய நலனில் அக்கறை இன்மை : புதிய இளைய தலைமுறையினரிடம் தேசப்பற்று, தேசநலன், தியாக உணர்வு ஆகியவை மங்கிப்போய் வருகிறது. தேசிய நலனில் அக்கறை

காட்டும் இளைஞர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது.

**இந்து சமய நெறிமுறைகள்**

இந்து மத போதனைகள், உயர்வான நன்னெறிகள், , நன் குணம் என்ற பண்போடு தொடர்புடையவை. அறிவையும் இயற் தன்மையையும் அடிப்படையாகக் கொண்ட நற்பண்புகளை இம்மதம் போதிக்கிறது எல்லா உயிர்களிடத்திலும் அன்பாக இருக்கவேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது இந்து மதம் போதிக்கும் நெறிகள் சிலவற்றை காண்போம்.

- நன்மை எது தீமை எது என அறிதல்
- கடமையைச் செய்தல்
- பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்ளுதல்
- அகிம்சையை கடைப்பிடித்தல்
- சுற்றுச்சூழலை பாதுகாத்தல்
- எல்லோரையும் மதித்தல்
- திறந்த மனதோடு இருத்தல்

ஆசை, இச்சை, கோபம் போன்ற குணங்களை வெளிப்படுத்த கூடிய செயல்கள் எதையும் செய்யாதிருத்தல் சாலச்சிறந்தது. நன்மை செய்தால் முடிவில் நன்மை அடைவாய், தீமை செய்தால் முடிவில் அதற்குரிய தண்டனை உண்டு என்று வேதங்கள் கூறுகின்றன. பிறருக்கு சிறிதளவுகூட தீங்கு விளைவிக்காத செயல்களையே செய்ய முயல வேண்டும் என்பதையும் இம் மதம் வலியுறுத்துகிறது.

**புத்த சமயக் கல்வி**

- புத்த மதத்தினர் இறைவனை அடைவதே கல்வியின் குறிக்கோள் என கூறினர்.

- கல்வி நற்குணங்களையும் ஆன்மீக தன்மையையும் வளரச் செய்ய உதவ வேண்டும்.
- ஏதோ ஒருவிதத்தில் வாழ்க்கை துன்பம் நிறைந்ததாகவே உள்ளது.
- ஆசையே துன்பத்திற்கு வேர்.
- ஆசையைத் துறந்தால் துன்பம் நீங்கிவிடும்.
- புத்தர் காட்டிய பாதையில் செல்லும் போது ஒருவர் துன்பத்திலிருந்து விடுபட்டு நிலையை அடைகிறார்.

**கல்வியை பற்றி அறிஞர்களின்** கருத்து

- ஐக்கிய நாட்டு சபையின் முன்னாள் பொதுச் செயலர் ஊதா அண்ட் அவர்கள் கூறியவை, நம் கல்வி ஒரு மனிதனை ஒரு மருத்துவராகவோ, பொறியாளராகவும், ஆசிரியராகவும் உருவாக்கியது. ஆனால் மனிதனை உண்மையான மனிதனாக உருவாக்குவதில்லை. மதிப்புகளை உணர்த்தவே மதங்கள் தோன்றின. அதை உணர்த்திய மதிப்புகளின் இருக்க நாம் காண இறையுணர்வும் அறநெறியும் ஆகும்.
- மனிதன் எந்த அளவு அறிவைப் பெறுகிறானோ, அந்த அளவு, அரநெஞ்சத்தை வளர்த்துக் கொள்ளவில்லை எனில், அந்த அறிவுப் பெருக்கம் துன்பப் பெருக்கத்தில் போய் முடியும் என்றார் பேரறிஞர் ெபட்ரண்டு ரஸ்ஸல். அவர் கூற்று இன்று முழுக்க முழுக்க உண்மையாகிவிட்டது.
- எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ, ஒருவனை தன்னுடைய சுய வலிமையை கொண்டு

நிற்க செய்யுமோ அத்தகைய கல்விதான் நமக்கு தேவை. மனிதனை மெல்ல மெல்ல இயந்திரம் ஆக்கிக் கொண்டு வருவதும் ஒரு கல்வியா? என்று நெஞ்சம் கொதித்தார் விவேகானந்தர்.

- முழுமையான கல்வி என்பது நுண்ணறிவுப் பயிற்சியோடு மனத் தூய்மையையும் ஆன்மீக நெறிகளையும் கற்பதாக இருக்கவேண்டும் என்றார் டாக்டர் ராதாகிருஷ்ணன்.

## 10 MARKS

**நன்னெறிகளின் வகைகள்**

நன்னெறிகளை இருவகையாக பிரிக்கலாம்

- தனிமனித நெறிமுறைகள்
- சமூக நெறிமுறைகள்

தனிமனித நெறிமுறைகள்

- அன்பு
- வாய்மை
- நாவடக்கம்
- தன்னம்பிக்கை
- அஞ்சாமை
- கருணை
- வன்முறை தவிர்த்தல்
- காலம் தவறாமை
- கடமை தவறாமை
- உடல் உழைப்பு
- பிறருக்கு உதவுதல்

- திருடாமை
- நேர்மை
- இறை நம்பிக்கை
- கொல்லாமை

சமூக நெறிமுறைகள்

- பொதுச்சொத்தை பேனல்
- தேசப்பற்று
- மனிதநேயம்
- ஒற்றுமை
- சுற்றுச்சூழல் பேணல்
- தலைமை பண்பு
- சமநோக்கு
- சமயங்களை மதித்தல்
- சாலை விதிகளை மதித்தல்
- சுற்றுப்புறத் தூய்மை பேனல்
- சேமிப்பு
- சுதேசி
- தீண்டாமை உணர்வை போக்கல்
- தேசிய ஒற்றுமை
- தொழில் தர்மம் பேனல்

**இஸ்லாமியம் போதிக்கும் நன்னெறிகள்**

- எப்பொழுதும் இறைவனோடு நெருங்கி இருக்க வேண்டும் என்பதையே இஸ்லாமிய மதம் வலியுறுத்துகிறது.

- வாழ்க்கை கடினமாக இருக்கும் போதும் பொறுமையாய் இருங்கள்.
- இக்கட்டு நேரங்களில் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள்.
- தேவையில் இருப்பவர்களுக்கு உதவி கரம் நீட்டுங்கள்.
- உடல் நலம் குன்றியோரையும், முதியோரையும் பராமரியுங்கள்.
- அனாதைகள், விதவைகளிடத்தில் கூடுதல் இரக்கம் காட்டுங்கள்
- தொண்டு நிறுவனங்களுக்கு தன்னார்வ தொண்டு செய்வதுடன், பொருளுதவியும் செய்யுங்கள்
- தொழிலிலும் வேலை செய்யும் இடத்திலும் நேர்மையாய் இருங்கள். பிறரை ஏமாற்றாதீர்கள்
- வயது சென்ற பெற்றோரை பராமரியுங்கள்
- ஆண்கள் பெண்களுடன், பெண்கள் ஆண்களுடனும் வெறும் நண்பர்களாக கூட இருக்க வேண்டாம். இந்த நட்பு எங்கு கொண்டும் செல்லும் என்று யாருக்குத் தெரியும்?

## கிறிஸ்தவ மற்றும் ஜைன மத நன்னெறிகள்

### கிறிஸ்தவ நன்னெறிகள்

- உன்னிடத்தில் அன்பு செலுத்துவது போல பிறரிடம் அன்பு செலுத்து பிறர் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறாயோ அதையே நீயும் பிறருக்கு செய்.

- பொய்யும், நம்பிக்கை இல்லா மனமும் இறைவன் விரும்பாதவை எப்பொழுதும் எல்லா சூழ்நிலைகளிலும் உண்மையையே பேச வேண்டும். வாய்மையே வெல்லும்.
- ஒருவர் தான் பெற்றுவிட்ட சாதனைகளை எண்ணி பெருமை கொள்ளக் கூடாது தன்னம்பிக்கையை விட்டு விடாமல் இருக்க வேண்டும்

**ஜைன மத நன்னெறிகள்**

- எல்லா நன்னெறி களுக்கும் மேலானது அகிம்சை.
- மனித உடல் இறைவன் தங்கும் ஆலயம்.
- பற்றற்ற நிலை மனவலிமையை கொண்டுவரும்.
- அறிவு சவால்களை எதிர்கொள்ள உதவுகிறது.
- கோபம் ஒருவரது முன்னேற்றத்தை தடுக்கிறது.
- அகிம்சையே அன்பின் நேர்மறை கொள்கை.
- உரிமைகளை விட்டுக் கொடுப்பது ஒரு மனப்பயிற்சி.

# UNIT II

## 5 MARKS

1. ஒற்றுமையின் சக்தியை விளக்குக.
2. அன்பை குறித்த நமது தேசத் தந்தையின் கருத்தை கூறு.
3. சகிப்புத்தன்மை இருந்தால் என்ன நற்குணங்கள் மாணவர்களில் உருவாகும்?
4. எளிமையின் அவசியத்தை கூறுக.
5. நம்பிக்கை தளராதிருத்தல் குறித்து சிறுகுறிப்பு வரைக.
6. “ நன்றி மறப்பது நன்றன்று” உதாரணம் காட்டி விளக்குக.
7. மரியாதை என்னும் உயரிய பண்பை விளக்கும் பொதுவான கருத்துக்களை எழுதுக.

1. **Describe the strength of unity.**
2. **Describe the opinion of our "father of the nation" on love.**
3. **What are the good qualities that tolerance develops in students?**
4. **Explain the need for simplicity.**
5. **Write short notes on optimism**.
6. **Being grateful is a good quality**. **Discuss.**
7. **Explain with example about the value of respect.**

## 10 MARKS

1. உலக அமைதிக்காக தரப்பட்டுள்ள முக்கிய கட்டளைகளை விளக்குக.
2. கீழ்கண்டவற்றை விளக்கு (i) அமைதி (ii) மகிழ்ச்சி (iii) மதித்தல் (iv) நேர்மை.
3. நேர்மறை மனநிலை பெறுவதற்கான படிநிலைகளை விளக்குக.
4. கல்லூரியில் பயிலும் மாணவியின் கடமைகளை குறித்து சிறுகுறிப்பு வரைக.

1. **Explain in detail about the guidelines for world peace.**
2. **Explain the following (i) Peace (ii) Happiness (iii) Respect (iv) Honesty**.
3. **What are the steps towards positive thinking? Discuss.**
4. **Write a short notes on duties of a college student.**

### ஒற்றுமையின் சக்தி

- தோழமை உணர்வையும் சனநாயக கோட்பாடுகளையும் வாழ்வாக முயற்சிகள் எடுப்பேன் என்கிற உறுதிமொழியை ஒவ்வொருவரும் எடுத்து செயல்பட ஐக்கிய நாடுகள் சபை அழைக்கிறது. துயருறும் மானுடம் எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் தோழமை உணர்வு அனைவரிடத்திலும் பொங்கி வழிந்து, அநீதி, வறுமை, அடக்குமுறை, போர் போன்ற அழிவுக்கு உரிய சூழல் மறைந்திட வழிவகுக்க வேண்டும்.

- தனித்து நின்று எதையும் நாம் சாதித்துவிட முடியாது. சமூகப் பொறுப்பும், நீதி உணர்வும் கொண்டு அனைவரோடும் இணைந்து ஒருவர் இன்னொருவர் தோழமையில் பிரச்சனைகளை சந்திக்க வேண்டும். ஆகவே இந்த ஒருங்கிணைந்த தோழமை செயல்பாடுகளை என் குடும்பம் தொடங்கி என் நாடு முழுவதும் ஏன் இந்த உலகம் முழுவதும் பரப்பிட என்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்வேன் என்று உறுதி எடுக்க வேண்டும்.
- உயிருக்கு மதிப்பு தருவது, வன்முறையை வெறுத்து ஒதுக்குவது, பகிர்ந்து கொள்வது, சுற்றுப்புறச் சூழலை பாதுகாப்பது, பிறரது பண்பாட்டு மரபுகளை புரிந்துகொள்வது, தோழமை சனநாயக உணர்வோடு செயல்படுவது போன்ற ஆறு உறுதி மொழிகளையும் தனிப்பட்ட முறையில் எடுத்துக் கொண்டு அமைதியும், அகிம்சையும் நிறைந்த நாடாக மாற்றிட நாம் ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை நமக்கு அழைப்பு விடுக்கிறது.

**அன்பை குறித்த நமது தேசத் தந்தையின் கருத்து**

- அன்பே காந்திஜியின் மதம், அன்பே இவரது போதனை, மனித குலத்தின் மீது இவர் தனியாத அன்பு பூண்டிருந்ததால் அன்பை அடிப்படையாகக் கொண்ட சட்டங்களே வாழ்வை வழிநடத்திச் செல்ல வேண்டும் என விரும்பினார். அன்பின் மூலமே உண்மையை உணர்தல் வேண்டும். நமக்கு அருகில் இருக்கும் கடவுளின் படைப்புகள் ஆகிய உயிரினங்கள் மீது அன்பு

செலுத்துவதே, எங்கும் நிறைந்துள்ள பரம் பொருளை நேரடியாக காண்பதற்கு சிறந்த வழி என்றார்.

- இந்நிலையை அடைய வெறுப்பு, பயம், வீண் பெருமை முதலிய நிலைகளை கடந்து ஒருவன் செயற்பட வேண்டும் என்றார். எவ்வாறு கடவுள் உண்மைப் பொருளாக இருக்கின்றாரோ அவ்வாறு அவர் அன்பாகவும் இருக்கிறார்.
- இவ்வாறெல்லாம் கூறிய காந்தியடிகள் கிராமம் கிராமமாகச் சென்று குறிப்பாக ஏழை எளிய மக்கள் மீது அன்பை பொழிந்தார். அக்கிராமத்தில் ஏழை எளிய மக்களை சந்தித்து அவர்கள் மீது அன்பு பொழிந்த பொழுது, கடவுளை நேருக்குநேர் கண்டதாக கூறினார்.
- காந்திஜி, கடவுளாகிய தந்தையை அவர்தம் படைப்புகள் ஆகிய மானிட குழந்தைகளின் அன்பு செலுத்துதல் மூலம் சென்றடைய விரும்பினார். காந்திஜியின் அரசியல் சமூக சீர்திருத்தங்கள் அனைத்தும் மனித குலத்தின் மீது இவர் கொண்டிருந்த அன்பின் அடிப்படையில் அமைந்திருந்தது.

**சகிப்புத்தன்மை இருந்தால் என்ன நற்குணங்கள் மாணவர்களில் உருவாகும்**

- ஒருவரை ஒருவர் நேசித்து
- சேர்ந்து வேலை செய்தல்
- நட்புணர்வு ஆதரித்தல்
- பொறுப்பாய் இருப்பது எவ்வாறு என அறிந்து கொள்ளுதல்
- நேர்மையாக இருத்தல்
- தன்னையும், பிறரையும் மதித்தல்
- மகிழ்ச்சியாயிருத்தல்

- கலவரத்தை தவிர்த்தல்
- பொய் சொல்லாமல் மெய் உரைத்தல்.

**எளிமையின் அவசியங்கள்**

- இளைஞருக்கு மதிப்பை ஏற்படுத்துவது எளிமையும் கண்ணியமும் ஆகும். சமூக நலனில் நாட்டம் கொண்டு, தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள ஒருவர் எளிமையான வாழ்க்கை முறைகளை கையாள வேண்டும் என்பது நமது தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகளின் ஆணித்தரமான கருத்து.
- காந்தியடிகள் ஆப்பிரிக்கா தேசத்திலிருந்து திரும்பியபின், மேலைநாட்டு வாழ்க்கை முறையை முற்றிலும் உதறிவிட்டு எளிய வாழ்க்கை வாழ தன்னை அர்ப்பணித்தார்.
- எளிய வாழ்க்கை என்பதற்கு வறுமையில் வாழ்வது என்று அர்த்தமல்ல. தானாக தன்னை வருத்திக் கொள்வது எளிமையை குறிப்பதல்ல. உங்கள் ஒழுக்கம் போலித்தனமானதாக இருத்தல் கூடாது. எது தேவையோ அதை தீர்மானித்து அதற்கு தகுதியாக நடந்து கொள்ளுதலே எளிமை.
- எளிமையில் தான் இயற்கை அழகு தவழ்கிறது அவை ஆரவாரமான ஆடை அலங்காரங்களிலோ, தேவையற்ற அணிகலன்களிலோ இல்லை. அளவுக்கு மிஞ்சிய ஒப்பனை செய்வதும் தவிர்க்கவேண்டிய செயலே. அமைதியாகவும் நிதானமாகவும் இருங்கள். எப்போதும் எளிமையாகவும் தன்னடக்கத்துடன் இருங்கள்.

**நம்பிக்கை தளராதிருத்தல்**

- நடப்பதெல்லாம் நன்மைக்கே நடக்கிறது என்ற எண்ணமே நம்பிக்கை தளராது இருப்பதற்கான எண்ணமாகும். வாழ்க்கை வாழ்வதற்கே உலகம் வாழ சிறந்த இடம் என்ற எண்ணத்தோடு இருப்பதையே நம்பிக்கை என்கின்றனர். சூழ்நிலையின் நேரான பக்கத்தை பார்த்தல் நம்பிக்கை தளராதவருக்கு, ஒரு செயலை தொடர்ந்து செய்வதற்கான தைரியத்தையும், திறமையையும் தரும்.
- முடியாது என்று உள் மனதில் நினைப்பவர்கள் தங்களுக்குள்ளே பெரும் தடை சுவரை எழுப்பி முயற்சி செய்யாதவர்கள். செய்வதற்கு மனம் இல்லாதவர்கள். முயற்சி எடுக்கத் தயங்குபவர்கள். இவர்கள் வாழ்வில் வளர்ச்சி வெளிச்சம் காண்பது கடினம்.
- முடியும் என்று முடிவு எடுப்பவர்கள் புதிய வழிமுறைகளை அணுகுமுறைகளை தேடுபவர்கள். நம்பிக்கை நிறைந்த முயற்சியோடு தொடர்ந்து தேடிக் கொண்டே இருப்பவர்கள். தோல்வியை வெற்றியாக மாற்றக்கூடிய மனப்பான்மை கொண்டவர்கள்.
- ‘ மனம் போல வாழ்வு' என்பது நம் நாட்டுப் பழமொழி. நீ எதை விரும்புகிறாயோ அது கட்டாயம் கிடைக்கும். ஆனால் அந்த விருப்பம் வலிமையானதாக இருக்க வேண்டும். எண்ணங்கள் செயல் வடிவம் பெறும்போது வெற்றிப்பாதை தானே திறந்து நமக்கு வழிவிடும். ஒவ்வொரு மனிதரிடமும் ஆற்றல்கள் அடங்கி கிடக்கின்றன. முன்னேற வேண்டும் என்ற ஆவல் வறுக்கும்போது ஒருவரிடம் அந்த ஆவல் தவிப்பாக துடிப்பாக மாறும் போது அவரிடம் உள்ள திறமைகள் ஏதாவது ஒரு வழியில் தாமே தலை எடுத்து வெளியில் வரும்.

**“ நன்றி மறப்பது நன்றன்று” உதாரணத்துடன் விளக்குக**

- வாழ்க்கையில் வெற்றி அடைய நல்ல மனநிலையே தேவை. நல்ல மனநிலையோடு ஒன்று நினைக்கும் போது அது நமக்கு கைகூடுகிறது எதையும் நேர்மறையாக சிந்திப்பவர் அதனை அவசியம் அடைவார். என்னை சுத்திகரிக்கப்பட்டு இருந்தால் ஆரோக்கியத்திற்கு நல்லது எண்ணம் சுத்திகரிக்கப்பட்டு இருந்தால் வாழ்வுக்கு நல்லது.
- 1914 ஆம் ஆண்டு, தாமஸ் ஆல்வா எடிசன் வைத்திருந்த பல கோடி ரூபாய் மதிப்புள்ள ஆய்வுக்கூடம் தீப்பற்றி எரிந்தபோது, எடிசன் மகன் சார்லஸ் அப்பாவைத் தேடி வந்தான். கூடாரவாசலில் தீயை அணைக்க முடியாமல் தவித்துக்கொண்டிருந்த தந்தையை கண்டான். மனம் பதறினான். அச்சமயம் எடிசன், சார்லசை பார்த்து, அம்மா எங்கே? அவளை உடனே அழைத்து வந்து இந்த நெருப்பை காட்டு. அவள் தன் வாழ்வில் இதுபோன்ற நிகழ்வை பார்த்திருக்கமாட்டாள் என்றார்.
- அடுத்த நாள் காலை, எரிந்த அந்த கூடாரத்தை கண்ட 67 வயது எடிசன், என்னுடைய பெரும் மதிப்புடைய பொருள்கள் எல்லாம் அழிந்துவிட்டன. எரிந்த அந்த நெருப்போடு என்னுடைய தவறுகளும் எரியூட்டப்பட்டுவிட்டன. கடவுளுக்கு மிக்க நன்றி. நான் ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கப் போகிறேன் என்று சொன்னார்.

**மரியாதை என்னும் உயரிய பண்பை விளக்கும் பொதுவான கருத்துக்கள்**

- உங்களைப் பிறர் கனிவோடு நடத்தும்போது உங்கள் பாராட்டையும் நன்றியையும் தெரிவியுங்கள்
- பிறருடைய சாதனைகளுக்காக அவர்களுக்கு உண்மையான பாராட்டுகளை கூறுங்கள்
- பிறருடைய கருத்துக்களையும் தீர்மானங்களையும் மதியுங்கள்
- உங்கள் உணர்வுகளை பண்போடு வெளிப்படுத்துங்கள்
- பிறரை மரியாதையாக நடத்துங்கள்
- பிறரோடு நடந்து கொள்ளும் விதத்தில் எளிமையை வெளிப்படுத்துங்கள்.

## 10 MARKS

**உலக அமைதிக்காக தரப்பட்டுள்ள முக்கிய கட்டளைகள்**

- அனைத்து உயிர்களையும் மதித்தல்.
- வன்முறைகளை தவிர்த்தல்.
- பிறரோடு பகிர்ந்து வாழ்தல்.
- பிறர் கருத்தை புரிந்து கொள்ளுதல்.
- புவியை பாதுகாத்தல்.
- ஒற்றுமையின் சக்தியை உணர்தல்.

**அனைத்து உயிர்களையும் மதித்தல்**

- “ நான் என் வாழ்வில் உயிர்களுக்கு மதிப்பு தருவேன்” என்பதுதான் அவர்கள் வைக்கிற முதல் உறுதிமொழி. குண்டுவெடிப்பு மதக்கலவரம், சாதி, இனச் சண்டைகளில் சாவு, கருச்சிதைவு, பெண் சிசுக்கொலை, அணு ஆயுத சோதனையில் உயிர் அறிவு போன்ற நிகழ்ச்சிகளின் போது அவற்றை கண்டித்து தனது கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும் என்று இதற்கு அர்த்தம்.

- எல்லா மனித உயிர்களும் சமம் என்கிற உறுதிப்பாடு வரவேண்டும். அப்படி வாழ என்னை சான்றோரை வலியுறுத்துவேன் என்பது முதல் உறுதி மொழியின் அடிப்படை.

**வன்முறைகளை தவிர்த்தல்**

- “ என் வாழ்வில் வன்முறையை வெறுத்து ஒதுக்குவேன்” அதாவது எனது அன்றாட வாழ்வில் உடல், உளவியல், பாலின, பொருளாதார, சமூகத் தளங்களில் அகிம்சையை கடைப்பிடிப்பேன் என்கிற உறுதியை எடுத்துக் கொள்ள வேண்டும்.
- பெண்கள் மீது நடத்தப்படும் அன்றாட வன்முறையை செயல்களை கண்டித்து காரணமானவர்கள் தண்டிக்கப்பட நான் ஆவன செய்வேன் என்று ஒவ்வொருவரும் உறுதிமொழி ஏற்க வேண்டும்.

**பிறரோடு பகிர்ந்து வாழ்தல்**

- என்னிடம் உள்ள தேவைக்கு அதிகமான பொருளை, பணத்தை, நேரத்தை, திறமையை இல்லாதவரோடு பகிர்ந்து கொள்வேன். பதுக்குதல், தனக்கு மட்டுமே எல்லாம் என்கிற சுயநலம், பொது சொத்தை சுரண்டல் போன்ற செயல்களில் நான் ஈடுபடமாட்டேன்.
- தேவைக்கு அதிகமான எதுவுமே அநீதியாக சேர்த்து வைக்கப்படுவதாக கருதப்படும். இந்த உள்ளொளி நம் ஒவ்வொருவருக்கும் வரவேண்டும்.

**பிறர் கருத்தை புரிந்து கொள்ளுதல்**

- பிறரைப் புரிந்து கொண்டு அவர்களது பண்பாட்டு சமூக தனித்துவத்தை மதிப்பேன். பல்வேறு மொழி, மத, பண்பாட்டுக்

கூறுகளை கொண்டவர்களோடு வாழ்கிற போது என் மொழிதான் உயர்ந்தது என் இனம்தான் மேல் என்கிற மேலாண்மை தனம் கூடாது.

- ஒவ்வொருவரின் பண்பாடு சமூக நிலைகளும் தனித்துவம் நிறைந்தது என்ற பண்பாட்டு மதிப்பு உணர்வு நமக்கு வரவேண்டும்.

**புவியை பாதுகாத்தல்**

- சுற்றுப்புறச் சூழலை என் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் பாதுகாக்க பாடுபடுவேன் என்ற உறுதிப்பாட்டை எடுக்க வேண்டும். முதலில் என் வீட்டை, எனது சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்துக் கொள்வேன் என்கிற அடிப்படை உணர்வு வந்திட வேண்டும்.
- தனக்குரிய வாகனம் அதிகமாக புகை கக்குகிறது என்றால் உடனே பட்டறைகளில் கொடுத்து அதிக புகை வராது இருக்க உடனடி நடவடிக்கை எடுப்பேன் என்று செயல்பட வேண்டும்.

**ஒற்றுமையின் சக்தியை உணர்தல்**

- தோழமை உணர்வையும் சனநாயக கோட்பாடுகளையும் வாழ்வாக முயற்சிகள் எடுப்பேன் என்கிற உறுதிமொழியை ஒவ்வொருவரும் எடுத்து செயல்பட ஐக்கிய நாடுகள் சபை அழைக்கிறது. துயருறும் மானுடம் எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் தோழமை உணர்வு அனைவரிடத்திலும் பொங்கி வழிந்து, அநீதி, வறுமை, அடக்குமுறை, போர் போன்ற அழிவுக்கு உரிய சூழல் மறைந்திட வழிவகுக்க வேண்டும்.
- தனித்து நின்று எதையும் நாம் சாதித்துவிட முடியாது. சமூகப் பொறுப்பும், நீதி உணர்வும் கொண்டு அனைவரோடும்

இணைந்து ஒருவர் இன்னொருவர் தோழமையில் பிரச்சனைகளை சந்திக்க வேண்டும். ஆகவே இந்த ஒருங்கிணைந்த தோழமை செயல்பாடுகளை என் குடும்பம் தொடங்கி என் நாடு முழுவதும் ஏன் இந்த உலகம் முழுவதும் பரப்பிட என்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்வேன் என்று உறுதி எடுக்க வேண்டும்.

**கீழ்கண்டவற்றை விளக்குக**

**அமைதி**

- ஆன்மீகமும், அறிவியலும் இணைந்து செயல்படும் போதுதான் அங்கே அமைதி தோன்றுகிறது. மனநிறைவும், அமைதியும், ஆற்றலும் இணையும் போது அது ஒரு மாபெரும் சக்தியாக உருப்பெற்று உலக அமைதிக்கு வழி வகுக்கிறது.
- புத்தர், இயேசு, மகாத்மா காந்தி, மார்ட்டின் லூதர் கிங், நெல்சன் மண்டேலா போன்றோர் மக்கள் மனதில் அன்பையும், அறிவையும், அமைதியையும் உருவாக்குவதில் முனைந்திருந்தனர்.
- ஒரு மனிதரிடம் அமைதி, பொறுமை, உழைப்பு, நேர்மை, நீதி, புது சிந்தனை இவை இருந்தால் அவருக்கு வெற்றியும் மகிழ்ச்சியும் எப்போதும் இருக்கும் என்கிறார் பெஞ்சமின் ஃபிராங்க்ளின்.

**மகிழ்ச்சி**

- வாழ்வு நமக்கு கொடுக்கப்பட்ட மாபெரும் கொடை,. இந்தக் கோடை எதற்காக தரப்பட்டு இருக்கிறது என்று சிந்தித்தோமானால் நமக்கு சில நினைவுகள் கிடைக்கும். ஒரு விதையை நமது வாழ்வோடு ஒப்பிடலாம். விதையின் நோக்கம் அது அப்படியே இருப்பதற்காக அன்று, மாறாக அது மண்ணில்

மடிந்து உருமாற்றம் பெறுவதற்காக. அது உருமாற்றம் பெற்று பயிராக வளர்ந்து தானியங்கள் ஆகவும் கண்களாகவும் பலன் கொடுக்கின்றன. இவ்வாறு தன்னுடைய தன்மையை அழித்து மற்றொன்றாக மாறி பயன்படுகிறது.

- இறைவன் படைத்த தோட்டத்தில் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகை. ஒவ்வொரு பணிக்காக படைக்கப்பட்டிருக்கிறோம். நொந்து கொண்டு வாழ்வது வாழ்வல்ல. மகிழ்ச்சியோடு நமது வாழ்வை சமூகத்துடன் பகிர்ந்து கொள்வதுதான் உண்மையான வாழ்க்கை.

**மதித்தல்**

- உலக அமைதிக்கும் அகிம்சை கலாச்சாரத்திற்கும் ஐநா சபை உலக மக்களுக்கு தந்துள்ள கட்டளைகளில் ஒன்று அனைத்து உயிர்களையும் மதித்தல் ஆகும். எல்லா மனித உயிர்களும் சமம் என்கிற உறுதிப்பாடு வரவேண்டும்.
- மாணவர்களிடையே அமைதியின்மை தோன்றுவதற்கு முக்கிய காரணம், அவர்களது மதிப்பானது குறைக்கப்படுவது அதாவது மாணவர்கள் என்றாலும், அவர்களுக்கு உரிய மதிப்பை கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்கப்படாமல் இருக்கும்போது, அவர்களிடையே குழப்பம் ஏற்படுகிறது.
- ஒரு மனிதர் பிறரால் மதிக்கப்பட வேண்டும் மாண்போடு நடத்தப்படவேண்டும். ஒரு மனிதனின் மாண்பு மதிக்கப்படும் பொழுதுதான் அவரது மனித உரிமைகள் காக்கப்படுகின்றன. மனிதனின் மாண்பு சிதைக்கப்படும் பொழுது மனித உரிமை மீறப்படுகிறது. எனவே மனித மாண்பை மதிப்பது என்பது மனித

உரிமையை காப்பதாகும். ஒரு மனிதரை சுதந்திரமாகவும் நிறைவாகவும் வாழ வைப்பதாகும்.

**நேர்மை**

- அறிவு என்ற புத்தகத்தின் முதல் அத்தியாயமே நேர்மை தான். நேர்மை என்பது, மனிதன் தன் பேச்சிலும், செயலிலும் உண்மையாக இருக்கும் நற்குணம் ஆகும். கருத்துக்களையும், நிகழ்வுகளையும் கூட்டியோ, குறைத்தோ சொல்லாமல் உள்ளதை உள்ளபடி எடுத்துரைப்பது நேர்மை. மனிதன் பிறருக்கு மட்டுமின்றி தனக்கும் உண்மை உள்ளவனாக இருப்பது நேர்மை.
- எந்தக் குறையும் இல்லாத ஒளிவீசும் வைரத்தை எவ்வாறு மறைத்து வைக்க இயலாதோ அதுபோல நேர்மையும் வெளிப்படையானது. பாதி உண்மையை சொல்வதும் நேர்மைக்கு எதிர்மாறானதே.

**நேர்மறை மனநிலை பெறுவதற்கான படிநிலைகள்**

**நல்ல எண்ணங்களுடன் உங்கள் ஒவ்வொரு நாளையும் தொடங்குங்கள்**

- காலை எழுந்தவுடன் என்னால் நன்றாக இருக்கும். நான் சந்திக்கும் அனைவரும் நலன்கள் அதிகம் பெற வேண்டும். இந்நாள் முழுவதும் நான் மகிழ்ச்சியாக இருப்பேன், பிறரையும் மகிழ்ச்சிபடுத்துவேன்.

**எல்லாவற்றிலும், எல்லாச் செயல்களிலும் உள்ள நல்லதையே பாருங்கள், தீயதை பார்க்காதீர்கள்**

- எல்லாவற்றிலும் உள்ள எதிர்மறை களையும் குறைகளையும் பார்த்து பழகிவிட்டதால் நல்லதை பார்க்க நாம் மறந்து விட்டோம்.

இனிமேல் குறைகளை மறந்து நிறையை மட்டுமே காணும் பழக்கத்தை, மன நிலையை உருவாக்குங்கள்.

**இப்பொழுதே செய்ய வேண்டும் என்ற பழக்கத்தை உருவாக்குவோம்**

- வேலைகளைத் தள்ளிப் போடுதல் எதிர்மறை மன நிலைக்கு இட்டுச் செல்லும். இப்பழக்கம் அவ்வேலையை செய்யவிடாமல் தடுக்கும் சோர்வை உருவாக்கும்.
- இன்று உங்களால் செய்ய முடிந்ததை, ஒருபோதும் நாளை வரை தள்ளிப் போடாதீர்கள்- பெஞ்சமின் ஃபிராங்க்ளின்.

**நன்றி மனநிலையை வளர்த்துக் கொள்ளுங்கள்**

- இல்லாததை நினைத்து வருந்துவதை விட இருக்கிறதை நினைத்து பெருமிதம் கொள்ளுங்கள் நன்றி செலுத்துங்கள்.
- உங்களிடம் உள்ள நல்ல ஆற்றல்கள், திறன்கள் போன்றவற்றை கணக்கிட்டு நன்றியுணர்வை உள்ளத்தில் உருவாக்குங்கள்.

**விழிப்புணர்வு நிறைந்த சிந்தனையை பெறுங்கள்**

- கல்விக் கூடங்களில் கற்றுக் கொள்வது என்பது மிகச் சொற்பமே. கல்விக் கூடத்திற்கு வெளியே நல்ல நூல்களை வாசிக்கும் பழக்கத்தை உருவாக்குங்கள். வாசித்து சிந்தியுங்கள்.
- விழிப்புணர்வு நிறைந்த சிந்தனைகள் நமது எதிர்மறை எண்ணங்களை வீழ்த்தும். நேர்மறை நோக்கிய பயணத்திற்கு பலம் சேர்க்கும்.

**உயர்ந்த சுயமதிப்பை வளர்த்துக்கொள்ளுங்கள்**

- சுயமதிப்பு என்பது நம்மை நாம் எப்படி உற்று நோக்குகிறோம், உணர்கிறோம் என்பதாகும்.

- பிறரோடு இணைந்து வாழ்கிறோம். நமது நல்ல எண்ணங்களும், தீய எண்ணங்களும் பிறரையும் பாதிக்கும். ஆகவே நல்ல எண்ணங்களால் நேர்மறை தாக்கத்தை உருவாக்குவோம். அதற்கு முதல்படி நாம் நம்மை நல்லுணர்வுடன் நோக்குவதாகும்.

**தீய சக்திகளை அறிந்துகொள் அதனை அழித்துக் கொல்**

- தீய பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய அமைப்புகள் நிறைய இருக்கின்றன என்பதை மறந்து விடாதீர்கள்
- அதை எதிர்த்து நின்று அழிப்பதும் ஒழிப்பதும் நேர்மறை எண்ணங்கள் உடையவரின் சமூகக் கடமையாகும்.

**அவசியம் செய்ய வேண்டியவைகளை விரும்பக் கற்றுக்கொள்ளுங்கள்**

- எது எது அவசியமோ அதனை விரும்பி, அதனை ஆழமாக கற்றுக் கொள்ளுங்கள். எது அவசியமோ அதை செய்யத் தொடங்குங்கள். பிறகு எது முடியுமோ அதை செய்யுங்கள்.
- வெற்றி பெறுபவர்கள் எப்பொழுதும் மிகச்சிறந்த காரியங்களை செய்வதில்லை. அவர்கள் சாதாரண வேலைகளை கூட மிகச் சிறந்த முறையில் செய்கின்றனர்.

**கல்லூரியில் பயிலும் மாணவியின் கடமைகள்**

- காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது என்பார்கள். கடமையைச் செவ்வனே செய்யும்போதுதான் வாழ்க்கை பயணத்தில் வெற்றிகளை பார்க்கின்ற வாய்ப்பு கிடைக்கும்.
- பல இளைஞர்கள் அரசியல் கட்சிகளை சார்ந்த நிற்காது பொதுநலத்தில் அக்கறை கொண்ட அமைப்புகளை உருவாகின்றனர். கலவரப் பகுதிகளில் சமய, சாதி, மொழி

சார்பற்ற குழுக்களாக இணைந்து ஆக்கபூர்வ செயல்பாடுகளில் இறங்குகிறார்கள்.

- சமூக நலனில் அக்கறை கொண்ட இயக்கங்கள், நிறுவனங்கள், குழுக்களுடன் இணைந்து கொண்டு ஆரோக்கியமான சூழலை சமூகத்தில் உருவாக்க அரும்பாடுபடுகிறார்கள். தங்கள் சொத்து, பணம் எல்லாவற்றையும் பொது சேவைக்கான தியாகம் செய்கிறார்கள்.
- ஆனால் இந்த ஆக்கப்பூர்வமான செயல்பாட்டை செய்து கொண்டு, அரசமைப்பில் இருந்து ஒதுங்கி நிற்கிறார்கள். இது பெரும் தவறு.
- மாறாக, நாட்டின் நலனில் அக்கறை கொண்டவர்களாக இளைஞர்கள் செயல்பட்டு தவறான தலைமையை தடுத்து நிறுத்த வேண்டும், அல்லது தவற்றை திருத்த வேண்டும்.
- நீங்கள் விட்டுச் செல்கிற சமூக வாழ்வியலை தொடர்ந்து வழிநடத்த வேண்டியவர்கள் நாங்கள். ஆதலால் உங்களது கடமையை உணர்ந்து செயல்படுங்கள் என்று இடித்துரைக்க வேண்டியவர்கள் இளைஞர்கள்.
- இப்போது உன் முக்கிய கடமை, கல்வியில் கவனம் செலுத்துவது. முதல் மாணவனாக வர வேண்டும் என்ற உன் இலக்கை, கடமைகளை கச்சிதமாகச் செய்து வந்தால் தானே அடைய முடியும்.
- வீட்டிலும் உனக்காக பல கடமைகள் காத்துக்கொண்டிருக்கின்றன. உன்னைப் பற்றிய கனவு உனக்கு இருக்கிறதோ இல்லையோ உன் தாய் தந்தைக்கு இருக்கிறது. அவர்களின் வாரிசு நீ என்ற வாஞ்சை வரவழைத்த கனவு அது.
- அதைத் தவிர குடும்பத்திற்காக அன்றாடம் அவர்கள் பாடுபடுகின்ற சிரமங்களை பார்த்துக்கொண்டு இருக்காமல்.

ஓரளவாவது அவைகளில் பங்கெடுத்து அவர்களுடைய பாரத்தைக் குறைப்பதும் உன் கடமை தான்.

**B. LATHA MAHESWARI, LECTURER IN CHEMISTRY**

**K.N.G.A.C, THANJAVUR.**

Unjt III

5 marks

1. ராஜாராம் மோகன் ராய் ஏற்படுத்திய சமுதாயச் சீர்திருத்தங்களை கூறு.
2. மகாத்மா காந்தியடிகள் நமக்கு கற்றுக்கொடுத்த பாடங்கள் என்ன?
3. சுவாமி விவேகானந்தரின் மக்கள் பணி குறித்து சிறுகுறிப்பு வரைக.
4. சுவாமி விவேகானந்தர் இளைஞர்களை குறித்து கூறியது என்ன?
5. தந்தை பெரியார் ஏற்படுத்திய சமுதாய சீர்த்திருத்தங்களை கூறு

1. Describe the social reforms brought by RajaRam mohan roy.
2. What did Mahatma Gandhi teach us?
3. Write short notes on social services of Swami vivekanandha.
4. What was Swami vivekanandha's opinion regarding youths?
5. Describe the social reforms brought by Thandhai periyar.

10 marks

1. அன்னை தெரசா சமூகத்திற்கு ஆற்றிய தொண்டினை விளக்குக.
2. தந்தை பெரியாரின் சமூக சீர்திருத்தம் குறித்து விளக்க உரை எழுது.
3. உன் மனதைத் தொட்ட சீர்திருத்தவாதி யார்? இவரிடம் உனக்குப் பிடித்த ஐந்து சமூக சேவைகளை கூறு.

1. Explain the social services of Mother Therasa.
2. Describe details the social reforms of Thandhai periyar.
3. Who is the social reformer who influenced you the most? Describe five social services of this person.

**ராஜாராம் மோகன்ராய் ஏற்படுத்திய சமுதாய சீர்திருத்தங்கள்**

- இவர் வங்காளத்தில் ஆயிரத்து 1722 மே 22 இல் ஒரு வைதிக பிராமண குடும்பத்தில் பிறந்தவர். பல மொழிகளில் தேர்ச்சி பெற்றார்.
- தனது மூத்த சகோதரனின் மனைவி உடன்கட்டை ஏறி உயிரை மாய்த்த செயலை கண்டார், சிந்திக்க முற்பட்டார். இந்துக்களிடம் காணப்பட்ட கண்மூடித்தனமான மூடப் பழக்கங்களையும், பகுத்தறிவுக்கு ஒவ்வாத செயல்களையும் ஆராய முற்பட்டார்.

பிரம்ம சமாஜம்

- 1928இல் பிரம்ம சபை என்னும் கழகத்தை நிறுவினார். இதுவே பின்னர் பிரம்ம சமாஜம் ஆனது.
- பொது வழிபாட்டின் அடிப்படையில் சாதி, சமய பேதமற்ற சமுதாயத்தை அமைப்பதே பிரம்ம சமாஜத்தின் தலையாய நோக்கமாகும்.

உடன்கட்டை ஏறுதல் அழிக்கப்படுதல்

- பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட முக்கியமான சமூக சீர்திருத்தம் உடன்கட்டை ஏறுதலை ஒழித்தே ஆகும்.
- கணவன் இறந்தபின் மனைவியும் தாமாகவே கணவன் சிறையில் ஏறி தன்னை எரித்துக் கொள்ளவேண்டும் . இதுவே என்று கூறப்படும் உடன்கட்டை ஏறுதல் ஆகும். இது வங்காளம் ராஜபுதனம் விஜயநகர பகுதிகளில் அதிகமாக காணப்பட்டது.
- ஆனால் ராஜாராராம் மோகன் ராய் என்பவர் சதியின் கொடுமைகளையும் தீமைகளையும் விவரித்து பல பிரசுரங்களை வெளியிட்டார். சாத்திரங்களின் படியும் எல்லா

நாட்டு நீதியின் படியும் சதி என்பது படுகொலையை ஆகும் என்றார்.

**மகாத்மா காந்தியடிகள் நமக்கு கற்றுக்கொடுத்த பாடங்கள்**

- அன்பையும், அகிம்சையும் உயிர் மூச்சாக கொண்டு, கத்தியின்றி, ரத்தமின்றி விடுதலைப் போர் நடத்தி, நம் நாட்டிற்கு விடுதலை பெற்றுத் தந்து, ‘ தேசத்தந்தை' என்று அனைவராலும் அன்புடன் போற்றப்படுபவர் நம் காந்தியடிகள்.

காந்தியின் சமூக சீர்திருத்தங்கள்

- வாய்மையே வெல்லும்
- அறவழிப் போராட்டம்
- சீமை துணி எரிப்பு போராட்டம்

உண்மை மீது ஆழ்ந்த பற்று உடையவராக இருத்தல் வேண்டும். கடவுள் உண்மை வடிவானவர் என்று கூறிய காந்திஜியே பின்பு god is truth உண்மையே கடவுள் என்று கூறினார். ‘ வாய்மையே வெல்லும்' இதுவே அவரது தாரக மந்திரம்.

அறவழிப் போராட்டம்

- காந்திஜி அறவழியில் போராட வேண்டும் என்று விரும்பினார்
- இதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியது தான் சத்யாகிரக போராட்டம்

உப்பு சத்தியாகிரகம்

- உப்பு வரியை எதிர்த்து உப்பு சத்தியாகிரகத்தை காந்தி அடிகள் தொடங்கினார். ஏப்ரல் மாதம் ஆறாம் தேதி நாட்டின் அனைத்து கடற்கரை பகுதிகளிலும் உப்பு காய்ச்சுதல் நடைபெற்றது.
- நாமக்கல் கவிஞரின் கத்தியின்றி ரத்தமின்றி என்ற பாடல் அப்பகுதியில் வழிநடைப் பாட்டாகக் அமைந்தது. தீண்டாமையை ஒழிக்க பெரிதும் உழைத்தார். ஏழை மக்கள் மதுவினால் அழிவதை கண்டு மதுவை தடை செய்தார்.

சீமை துணி எரிப்பு போராட்டம்

- காந்தியடிகள் அந்நிய நாட்டுத் துணிகளை மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்று கூறினார். நம் நாட்டில் நெய்யப்படும் கதிர் ஆடையை அணிய வேண்டும் என்று வலியுறுத்தினார்.
- இதன் மூலம் நம் நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று நம்பினார்.

ஒத்துழையாமை இயக்கம்

- ஆங்கில அரசுக்கு எதிராக காந்தியடிகள் ஆரம்பித்ததுதான் ஒத்துழையாமை இயக்கம். அதன்படி சுதேசி பொருள்களை மக்கள் பயன்படுத்த வேண்டும். தீண்டாமையை விளக்கவேண்டும். போதைப் பொருள்களை புறக்கணிக்க வேண்டும்.
- தேசிய பள்ளிகளை அமைக்க வேண்டும். எளிமையாக வாழ கற்றுக் கொடுத்தவர் மகாத்மா காந்தி. இந்திய சமூகத்தினர் தங்கள் வீடு வாசல்களையும் சுற்றுப்புறங்களையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை கற்றுக்கொடுத்தவர் நமது தேசத்தந்தை.

**சுவாமி விவேகானந்தரின் மக்கள் பணி**

- இந்திய மக்களுக்கு வீரத்தையும் அச்சம் இன்மையையும் ஆன்மீகத்தையும் ஓங்கி முழங்கிய வீரத்துறவி விவேகானந்தர் ஆவார்
- மனிதருக்கு சேவை செய்வதை இறைவனுக்கு சிறந்த முறையில் சேவை செய்வதற்கு சமம் என்ற குறிக்கோளை கொண்ட ராமகிருஷ்ண மடத்தை நிறுவினார்
- ஏழைகளின் கண்ணீரை கண்டு கலங்கி அவர் சாதி, மத பேதங்களை வெறுத்து அனைவரும் நலமாய் வாழ வேண்டும் என்று எண்ணியவர் விவேகானந்தர்.
- தீண்டாமையை உடைத்தெறிந்து ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்தவர். விழிமின், எழுமின், உழைமின் என்பதே அவருடைய அறிவுரையாகும்.
- இந்தியா குடிசைகளில் வாழ்கிறது. உழைக்கும் பாமர மக்கள் எண்ணற்ற கொடுமைகளை சகித்ததால்தான் தளராத மன உறுதியையும், உலகையே அழிக்கும் வல்லமையையும் பெற்றுள்ளார்கள் என்று பாமர மக்களை ஊக்கப்படுத்தினார்.
- இந்தியாவில் இரண்டு பெரும் தீமைகள் இருக்கின்றன. பெண்களை காலின் கீழ் மிதித்து நசுக்குதல், சாதிக் கட்டுப்பாடுகள் மூலம் ஏழைகளை கசக்கிப்பிழிதல் என்று மக்களுக்கு உணர்த்தினார்.
- இந்தியர்களாகிய நம்மிடம் ஒரு நிறுவனமாக ஒன்று சேர்ந்து செயல் புரிவது என்பது அறவே இல்லாமல் இருக்கிறது. இந்த ஒரு பெரிய குறைபாடு தான் எல்லா விதமான தீமைகளுக்கும் அடிப்படை காரணம் என்று ஆணித்தரமாக எடுத்து உணர்த்தினார்.
- நவீன இந்தியாவை பற்றி பல கனவுகள் கண்டதோடு மட்டுமின்றி, அதை செயல்படுத்தும் ஆற்றல் இளைஞர்களுக்கு இருப்பதாகவும்

கூறினார். இந்தியாவை உலக அளவில் மிகச் சிறந்த நாடாக மாற்ற வேண்டும் என்ற கனவு கண்ட விவேகானந்தர் 1902 இல் இறை ஜோதியில் கலந்தார்.

**சுவாமி விவேகானந்தர் இளைஞர்களை குறித்து கூறியது**

- இந்தியாவை முன்னேற்ற விவேகானந்தர் கையாண்ட ஆயுதம்" இளைய சமுதாயம்" இளைஞர்களின் துடிப்பை அதிகரிக்கும் வகையில் அவருடைய போதனைகள் அமைந்தன.
- விழியுங்கள், எழுங்கள், லட்சியம் அடையும் வரை ஓயாது இருங்கள் என்ற பொன்மொழியை சுவாமி விவேகானந்தர் இளைஞர்களுக்கு உணர்த்தினார்.
- உன் மேல் உனக்கு நம்பிக்கை இல்லாவிடில் உன்னை ஆயிரம் கடவுளர்கள் ஆளும் காப்பாற்ற முடியாது என்று இளைஞர்களிடம் தன்னம்பிக்கையை வளர்த்து வீரத்துறவி.
- விதவை மறுமணத்தை ஆதரித்தார் உருவ வழிபாட்டை ஒழிப்பதில் பங்கேற்றார்.
- ஏழைகளின் பசியை தீர்க்காத, விதவைகளின் கண்ணீரை துடைக்க என்ற கடவுளின் மேலும் எனக்கு நம்பிக்கை இல்லை என்று கூறியவர் சுவாமி விவேகானந்தர்.
- ராமகிருஷ்ண மடத்தின் கிளைகள் இன்று இந்தியாவில் மட்டுமின்றி உலக அளவில் பரந்து விரிந்துள்ளன.

**தந்தை பெரியார் ஏற்படுத்திய சமுதாய சீர்திருத்தங்கள்**

- எல்லோருக்கும் இலவசக் கல்வி
- அரசியல் சட்டத்தில் இருந்து சாதி சமயத்தை நீக்குதல்
- மதுவிலக்கு

- விவசாயிகள் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு வழிகள்
- அநியாய வட்டி முறை ஒழிப்பு
- தொழிலாளர்களின் நியாயமான வருமான உயர்வு
- பெண்களுக்கு சம உரிமை சொத்துரிமை
- விதவைகளுக்கு மறுமணம்

10marks

**அன்னை தெரசா சமூகத்திற்கு ஆற்றிய தொண்டுகள்**

- அன்னை தெரசா 1910 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26ஆம் இத்தாலி தேசத்தில் பிறந்தார். அவருக்கு ஆக்னஸ் என்று பெயரிடப்பட்டது
- அன்னை தெரசா அவர்கள் முதன் முதலில் கொல்கத்தா நகரில் மோத்திகில் என்ற வரியில் காலடி எடுத்து வைத்தார் அங்குள்ள ஒரு சிறு வீட்டில் பள்ளி ஒன்றை நிறுவி குழந்தைகளுக்கு கல்வி கற்றுத் தந்தார்.
- தரையையே கரும்பலகை ஆக பயன்படுத்தி தான் அவர் இப்பணியை ஆரம்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. குழந்தைகளுக்கு சுத்தம் மற்றும் சுகாதாரம் அவசியத்தை பற்றி எடுத்துரைத்தார்.
- இறப்போர் இல்லம், சிசுபவனம், தொழுநோய் காப்பகம், போன்ற இருபதுக்கும் மேற்பட்ட பிணி போக்கும் பணிகளை அன்னை தெரசா தோற்றுவித்தார்.
- ஏழைகளோடு சேர்ந்து ஊறி, நகர்ந்து, வாழ்ந்து, பழகிய அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களை உணர்ந்து பணிவிடை செய்தார். பசியால் வாடுகின்ற, வீடின்றி தவிக்கின்ற, கண்பார்வை

இல்லாமல் அல்லல் ஊறுகின்ற, தொழுநோயால் பிடிக்கப்பட்ட, சமுதாயத்தால் புறக்கணிக்கப்படுகின்றன மக்களுக்காக தன்னால் இயன்ற அத்தனை உதவிகளையும் பாரபட்சம் இல்லாமல் செய்தார்.

- கவனிப்பார் இல்லாமல் பாவிக்கின்ற பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்டு கின்ற முதியவர்களுக்காக கருணை இல்லத்தை உருவாக்கினார்.
- கல்கத்தா நகரில் தொழுநோயால் அநேகர் பாதிக்கப்பட்டிருந்தனர். நோயாளிகளைக் காப்பாற்ற தன்னுடைய அறக்கட்டளை சார்பாக தொழுநோயாளிகள் காப்பகத்தை ஆரம்பித்தார்.
- திக்கற்ற குழந்தைகள், ஊனமுற்ற குழந்தைகள், தாயின் அரவணைப்பை இறந்த மனவளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகள் தவிர, குப்பை தொட்டிகள் மற்றும் சாக்கடைகளில் இருந்து கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளை காக்க சிசு பணம் என்று காப்பகத்தை 61 இடங்களில் ஆரம்பித்து தொண்டாற்றினார். எளிய வாழ்க்கை வாழ்ந்து இறையன்பு உடன் பணியாற்றிய அன்னை தெரசா நோபல் பரிசு பெற்று உலகம் போற்றப்படுபவர் ஆனார்.

**தந்தை பெரியாரின் சமூக சீர்திருத்தம்**

- பெரியார் வைக்கம் வீரர், **ஈரோட்டு** சிங்கம் என்றெல்லாம் அழைக்கப்பட்ட இவர் பெயர் ஈ. வெ. இராமசாமி. அசாத்திய துணிச்சல், அபாரமான சமூக அக்கறை, தீர்க்கமான போராட்ட குணம், இந்த மூன்று ஆயுதங்களைக் கொண்டே தந்தை பெரியார்

நடத்திக் காட்டிய புரட்சிக்கு இணையாக இன்னொன்றை சொல்ல முடியாது.

- சமூகத்தில் உள்ள மூட நம்பிக்கைகள் பலவற்றை ஒழிக்க பாடுபட்டார். ஆண்கள் பார்க்கும் எல்லா வேலைகளையும் எல்லா துண்டுகளையும் பெண்கள் செய்ய முடியும் என்ற எண்ணம் கொண்டவர்.
- ஈரோடு நகரத்துக்கு குடிநீர் வசதி, சுகாதார வழிமுறைகளை சிறப்புற அமைத்து தந்தார். மதுவிலக்கை கடைபிடித்தால் தான் நாடு உருப்படும் என்ற போக்கை முதலில் அமல்படுத்தியவர் தந்தை பெரியார்.
- சாதி வேறுபாட்டை அகற்றுவதன் மூலமே ஒடுக்கப்பட்ட மனிதனின் சுயமரியாதையை அடைய முடியும் என்பதில் உறுதியாக இருந்தார். திருவிதாங்கூர் மன்னர் ஆட்சிக்கு உட்பட்ட வைக்கம் என்ற ஊரில், தாழ்த்தப்பட்ட மக்கள் தெருவில் நடக்க உரிமை வாங்கி தந்த தாய் வைக்கம் வீரர் என்ற பெயர் பெற்றார்.
- பகுத்தறிவு மனிதன் ஒழுக்கம் உடையவனாக இருக்கவேண்டும் என்பதையும் மற்ற மனிதர்களுக்கு தன்னாலான தொண்டு உதவிகள் செய்ய வேண்டும் என்பதை தத்துவமாக கொண்டது என்று விளக்கம் கொடுத்தார்.
- மக்கள் மனதில் அநீதியை எதிர்க்க, சுரண்டலை ஒழிக்க, மக்கள் ஒருமைப்பாட்டை வளர்க்க, மூடநம்பிக்கையில் இருந்து விடுபட, சமத்துவத்தை சமதர்மத்தை பயிரிட வைக்க உதவுவன பெரியாரின் சீரிய கருத்துக்கள்.

**உன் மனதை தொட்டு சீர்திருத்தவாதி யார்?**

என் மனதை தொட்ட சீர்திருத்தவாதி அன்னை தெரசா. இவரிடம் எனக்கு பிடித்த ஐந்து சமூகசேவைகள் பின்வருமாறு

- கல்கத்தா நகரில் மோத்திகில் என்று சேரியில் உள்ள குழந்தைகளுக்கு தரையை கரும்பலகை பயன்படுத்தி கல்வி போதித்தது.
- தொழுநோயால் பாதிக்கப்பட்டு சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்த அவரின் சேவை மனப்பான்மை.
- கவனிப்பார் இன்றி அவதியுறும் முதியவர்களுக்கு கருணை இல்லம் ஆரம்பித்த அவரின் மேன்மை.
- ஏழைகளோடு சேர்ந்து வாழ்ந்து பழகி அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களை உணர்ந்து பணிவிடை செய்த அவரின் மாண்பு.
- பசியால் தவிப்பவர்கள், கண் பார்வையற்றவர்கள், திக்கற்ற குழந்தைகள், மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் அனைவருக்கும் அன்னையாக திகழ்ந்த அவரின் உன்னத பண்பு.

## Unit IV

### 5 marks

1. விழும சீரழிவு என்றால் என்ன? விழுமச் சீரழிவுக்கான காரணங்களை கூறு.

2. கடுமையாக உழைத்து இருங்கள் என்ற அறிஞர்களின் அறிவுரையை விவாதி
3. ஊழலை தடுப்பதில் மாணவர் பங்கு என்ன?
4. பயங்கரவாதம் சிறுகுறிப்பு வரைக
5. தீவிரவாதத்தை ஒழிக்கும் வழி முறைகளை கூறு
6. இன்றைய கல்விமுறையின் குறைகளை கூறு

1. What is value crisis? What are the reasons for value crisis.
2. Discuss the idea of reformists- Be hard working.
3. What is the role of student in preventing corruption?
4. Write short notes on terrorism.
5. What are the wayss to eradicate terrorism?
6. What are the pitfalls of todays educational system?

10 marks

1. நீதி இல்லாத வணிகம் குறித்து விளக்க உரை எழுது
2. ஊழலுக்கான காரணங்களை கூறு
3. சமுதாயத்தில் ஊழல் குறித்த விளக்க உரை எழுது
4. நல்லொழுக்கம் இல்லாத கல்வி குறித்து விவாதி

1. Explain in details about business without principles.
2. What are the reasons for corruption?
3. Write in detail about corruption in society.
4. Discuss about indisciplined educational system.

## விழுமக் சீரழிவு

- இன்று' விழும நெருக்கடி' தோன்றியுள்ளது விழுமங்கள் சிதைவு ஏற்படுவதையே விழும நெருக்கடி அல்லது விழும சீரழிவு என்று குறிப்பிடுகின்றனர்

- சமூகத்தில் விழும சிதவு தோன்றி சமூக சீரழிவு ஏற்பட்டுள்ளது. எதையும் செய்யலாம் எப்படியும் வாழலாம் என்ற மனப்போக்கு மக்களிடம் தலைதூக்க ஆரம்பித்துவிட்டதே இதற்கு அடிப்படை காரணம் ஆகும்.

உழைப்பில்லாத செல்வம்

- உழைப்பு என்பது வாழ்க்கை நெறிகள் இன் மிக முக்கியமான ஒன்று என்பது தெளிவாகிறது.
- பணமிருந்தும் குணம் இல்லாத மனிதன் அழிந்து போகும் மிருகத்துக்கு சமம் கடின உழைப்பால் வந்த செல்வமே செழிப்பைத் தரும் உழைப்பின்றி வந்த செல்வம் எந்த செயல் திறனையும் உருவாக்குவதில்லை.
- விழுமம் சீரழிவு ஒரே நாளில் ஏற்படுவதில்லை இது சிறுக சிறுக உருவாகிப் பல மாறுகிறது. விழுமம் சீரழிவுக்கான முக்கிய காரணங்களாவன:
- தொழில்மயமாதல்: மக்கள் தொகை பெருக்கத்தின் விளைவாக உற்பத்தியை விரைவாக பெருக்க ஒவ்வொரு நாடும் வேளாண் பொருளாதாரத்தில் இருந்து தொழில் மயமாக்கல் ஈடுபடுகிறது.
- போன் சந்தையில் ஏற்படும் போட்டியின் விளைவாக தத்தம் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள எவ்வித வழிமுறையையும் மேற்கொள்ளலாம் என்ற கருத்து மிக வலுவாக ஒவ்வொருவர் மனதிலும் புகுந்து செய்வதற்கும் செயல்களில் சர்வசாதாரணமாக ஈடுபட வழி செய்கிறது.

நகர் மயமாதல்

- தொழில் மயமாதலின் மற்றொரு விளைவு, நகர்மயமாதல், வேளாண் பொருளாதார முக்கியத்துவம் இழப்பதால் கிராமங்கள்

வரண்டு போய் தரிசு நிலங்களையும், பாழடைந்த வீடுகளையும் கொண்டு காட்சியளிக்கின்றன.

- தான் உயிர் வாழ எதை வேண்டுமானாலும் செய்யலாம், யாரை வேண்டுமானாலும் நசுக்கலாம் என்ற மனோபாவம்.

**கடுமையாக உழைத்து இருங்கள் என்ற அறிஞர்களின் கருத்து**

- உழைக்காதவர் உண்ணலாகாது- பைபிள்
- உழைக்காதவன் திருடர் – காந்தியடிகள்
- ஒருவரின் சொத்து- உழைப்பு, வியர்வை, பசி- விவேகானந்தர்
- சோம்பலுடனும் சோர்வுடனும் நூறு ஆண்டுகள் வாழ்வதைவிட கடின உழைப்புடன் ஒருநாள் வாழ்ந்தால் மேல் உழைப்புடன் கூடிய வாழ்க்கை சொர்க்கத்தின் கதவை திறக்கும்- குன்றக்குடி அடிகளார்
- ஒருவனுக்கு அநியாயமாய் வந்த பொருள் ஒன்றுக்கும் உதவாது- சாலொமோன் ஞானி.

**ஊழலை தடுப்பதில் மாணவர்கள் பங்கு**

- இல்லமும், கல்விக்கூடம் தான் இந்த ஊழல் பேயை விரட்டி அடிக்க கூடிய இயந்திரங்கள்
- நேர்மையான மனிதனாக வாழ்வது எத்தனை இடைஞ்சல் இல்லாதது, எத்தனை உத்தனமானது, கௌரவம் ஆனது என்பதை இளம் வயதிலேயே நெஞ்சில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

ஊழலை ஒழிக்க உன் பங்கு என்ன?

- நீ எந்த ஊழலும் செய்யாமல் இருஊழலும் எந்த ஊழலிலும் சேராமல் இரு

- முடிந்தால் உன்னை சுற்றி நடக்கும் ஊழல்களை பற்றியும், நீ சந்திக்க நேரிடுகின்றது முறைகேடுகளையும் ஊழல் தடுப்பு துறைக்கு தகவல் தெரிவி.
- தொலைபேசி எண்கள்: 9444077666.
- முடிவாக, வளரும் இளைஞருக்கு சிறந்த முன்னுதாரணம் நம் முன்னாள் குடியரசு தலைவர் ஏ. பி. ஜே. அப்துல் கலாம் அவர்கள்தான்
- அவர் ஓய்வு பெற்ற ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெளியேறும் போது இரு சிறிய சூட்கேஸ் களுடன் தான் போகிறேன் என்று கூறிய வார்த்தைகள் உயர்ந்த பதவிகளில் இருப்பவர்கள் இடம் இருக்க வேண்டிய நேர்மை மற்றும் ஒளிவுமறைவற்ற தன்மையை வலியுறுத்தும் உன்னதமான பிரகடனமாகும்.

**பயங்கரவாதம்**

- இன்று உலக அமைதிக்கு அச்சுறுத்தலாக விளங்கும் மிகப்பெரிய சவால் பயங்கரவாதம் என்னும் உருவில் தோன்றியுள்ளது
- இப்பிரச்சினை பணக்காரர் நாடாகவும் வல்லரசாகவும் திகழும் அமெரிக்கா முதல், வளரும் நாடுகளான இந்தியா, இலங்கை, இந்தோனேசியா , பிலிப்பைன்ஸ் போன்ற பல நாடுகளையும் பாதிப்புக்கு உள்ளாக்குகிறது.
- ‘ அல்கொய்தா' தீவிரவாதிகள் செப்டம்பர் 11 2001 இல் அமெரிக்காவின் வானுயர்ந்த உலக வர்த்தக மைய கட்டிடங்கள் தரைமட்டமாக்கி பெரும் நாசத்தை விளைவித்த பின்னர், பயங்கரவாதம் எனும் கொடூர அரக்க தனத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க ஐ. நா. வின் அனைத்து உறுப்பு நாடுகளும் உறுதி பூண்டனர்.

- பயங்கரவாதிகள் தங்களது' தற்கொலை படைக்கு' சேர்க்கவும், ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொள்ளவும், பாதுகாப்பான பதுங்கும் இடங்களை உருவாக்கி கொள்ளவும், பயம் மட்டும் தேவைப்படும் ஆதாரத்தை பெறவும் சர்வதேச அளவில் போதைப்பொருட்கள் கடத்தல் அன்னிய செலாவணி மோசடிகள், அடித்தல் போன்ற சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு பல்வேறு நாடுகளின் பொருளாதாரத்தையும் நிலைகுலையச் செய்கின்றன.
- வளர்ச்சிப் பணிகளில் தன் கவனத்தை செலுத்த வேண்டிய ஆட்சியாளர்களும், திட்ட வல்லுனர்களும், பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளை திட்டமிடுதலில் தன் நேரத்தையும் உழைப்பையும் செலவிட வேண்டியுள்ளது.
- பயங்கரவாத செயல்களால் ஏற்படும் நாகங்கள் நாட்டின் பொருளாதாரத்தை நலிவடைய செய்கின்றன.

## தீவிரவாதத்தை ஒழிப்பதற்கான வழிமுறைகள்

- மக்களிடையே கல்வி அறிவைப் பெருக்க, மற்றவர்களின் அடிப்படை உரிமைகளை மதிக்க கற்றுக்கொள்ள வேண்டும்.
- கல்வி மூலம் மாணவர்களிடம் அடிப்படை விழுமங்களான அன்பு, நீதி சகிப்புத்தன்மை, போன்றவற்றை வளர்ச்சி அடைய செய்ய வேண்டும்.
- திட்டமிட்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அதிகப்படுத்துவதன் மூலம் மக்களிடையே காணப்படும் பெருத்த சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்க முயற்சிக்க வேண்டும். உழைக்கும் வர்க்கம் சுரண்டபடாமல் இருந்தால், வன்முறை கிளர்ச்சிகள் எழுவது பெருமளவு தவிர்க்கப்படும்.

- நாட்டில் படித்த இளைஞர்களுக்கு முறையான வேலை வாய்ப்பை பெறுவதன் மூலம், அவர்கள் தீவிரவாத இயக்கங்களின் வலையில் விழுவதை தடுக்க முடியும்.
- பிடிபட்ட தீவிரவாதிகளுக்கு ஒத்துழைப்பு நல்கியோர்க்கும் சட்டப்படி உயர்ந்த பட்ச தண்டனையை தருவதற்கு வழிவகை செய்ய வேண்டும்.
- சமயச் சார்பின்மை என்பது எந்த இடத்திலும் நம்பிக்கை இல்லை என்ற பொருள் அல்ல. அனைத்து சமயத்தையும் மதித்து நடத்தல் என்பது உண்மையான சமயசார்பின்மை ஆகும். எனவே பள்ளிகளில் சமயக் கருத்துக்களும் அறநெறி கருத்துக்களும் கற்பிக்கப்பட வேண்டும்.
- நோக்கம் மட்டும் புனிதமாய் இருந்தால் போதாது, அதை அடையும் வழிமுறைகளும் தூய்மையானதாக இருத்தல் அவசியம் என்ற கருத்தை இளஞ்சிறார்கள் மனதில் விதைக்க வேண்டும்.

**இன்றைய கல்வி முறையின் குறைகள்**

- இன்றைய கல்வித் திட்டத்தில் அதிக குறைபாடுகள் காணப்படுகின்றன. அதுவே பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஒழுக்கக் கேடுகளையும், குழப்பங்களையும் உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இன்றைய கல்வித் திட்டத்தில் காணப்படும் கீழ்க்கண்ட குறைபாடுகளை கல்வியாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

- இன்றைய கல்வி முறையானது, மாணவர்களை அவர்களது வாழ்க்கைக்கு தயார் செய்யவில்லை
- தேசிய இலக்குகளையும், படிக்கிற நோக்கங்களையும் பிரதிபலிப்பதாக அமையவில்லை.
- அறிவு வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாமல், பட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது.
- தான் தெரிந்து கொண்டு உண்மைகளையும் செய்திகளையும் அறிவுபூர்வமாக பயன்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மாணவர்கள் மனப்பாடம் செய்வதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.
- மாணவர்களின் அறிவு தேர்ச்சியை தொடர்ந்து மதிப்பீடு செய்யாமல் இறுதி தேர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது
- தேர்வில் வெற்றி பெறுவதற்கான அனைத்து குறுக்கு வழிகளையும் பயன்படுத்துவதை ஊக்கமிழக்க செய்யும் நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை.

10 marks

**நீதி இல்லாத வணிகம்**

- சமூக வாழ்வில் வணிகம் இல்லாமல் இருக்கவே முடியாது. வியாபாரம் என்னும் வணிகத்தின் அடிப்படை நோக்கமே ஓரிடத்தில் விளைந்த பொருளை அது விளையாட அல்லது கிடைக்காத மற்றொரு இடத்தில் வாழும் மனிதர்களுக்கும்

பயன்படுத்துமாறு எடுத்துச் சென்று சேர்ப்பது. இப்பணிக்கு வியாபாரம் என்று பெயர்.

- மலையில் விளைந்த பொருளும், வயலில் விளைந்த உணவுப் பொருளும், காட்டில் விளைந்த மரம் மற்றும் கணி பொருளும் மாதம்தோறும் ஓரிடத்தில் குவிக்கப்பட்டு மக்கள் முன்வைக்கப்படும் இடத்துக்கே சந்தை என்று பெயர்.
- கடலோர மீனவர் மீனைக் கொடுத்து மலைத்தேனீ வாங்கிக்கொள்ளும் பண்டமாற்று முறையே தொடக்கத்தில் இருந்தது. நாளடைவில் பொருட்களை உருவாக்கும் மனிதர்களிடமிருந்து பொருட்களை பெற்று அவை தேவைப்படும் மற்றவர்களுக்கு கொடுத்து இருதரப்பு அவரின் தேவைகளை நிறைவேற்றுகின்ற தொழில்முறை சார்ந்த சிலர் உருவானார்கள். அவர்களே வணிகர் அல்லது வியாபாரிகள் என பட்டார்கள்.
- உன் ஒரு பொருளுக்குரிய விலை எதுவோ அதுதான் பணிகளையும் ஆகும்
- ரஷ்யாவில் வணிகத்தை குறித்து ஒரு கதை உண்டு. ஒரு மாம்பழத்தின் விலை 10 ரூபிள். 10 மாம்பழங்கள் வாங்கி ஒரு மாம்பழம் 20 ரூபாய் என்று விட்டால் என்ன கிடைக்கும்? இந்திய குழந்தை என்ன சொல்லி இருக்கும்? 100 ரூபிள் லாபம் கிடைக்கும் சார் என்று சொல்லி இருக்கும். ஆனால் ரஷ்ய குழந்தை என்ன சொல்கிறது தெரியுமா பத்து ரூபாய் பொருளை 20 ரூபாய்க்கு விற்றால் 2 ஆண்டு கடுங்காவல் தண்டனை கிடைக்கும் என்று சொல்லிற்று.
- கலப்படம் செய்தல் ஒரு பொருள் வாங்கினால் இன்னொரு பொருள் இலவசம் என்று தெரிந்தே மற்ற தரமான பொருட்களை ஏமாற்றிவிட்டது அதிரடி தள்ளுபடி மாபெரும் தள்ளுபடி என்று

அறிவித்து போய் வைத்துவிட்டு போன்றவை வியாபாரங்கள் ஆகாது.

- மூன்றாம் உலக நாடுகளிடம் இருந்து கனி வளங்களை முதல் உலக நாடுகள் மிக மலிந்த விலையில் வாங்குகின்றன. அதைக் கொண்டு பொருள்களை உற்பத்தி செய்து தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களை மூன்றாம் உலக நாடுகளுக்கு அதிக விலைக்கு விற்று இலாபம் பெறுகின்றனர். இது ஒரு அநீதியான வியாபார முறை.

**ஊழலுக்கான காரணங்கள்**

- லஞ்ச ஒழிப்புத்துறை கமிஷ்னர் திரு. என். விட்டல் அவர்களின் கருத்துப்படி ஊழல் என்பது ஒரு நிதி சார்ந்த பயங்கரவாதம் ஜம்மு மற்றும் காஷ்மீரில் தீவிரவாதத்தை ஒடுக்க இந்தியா கோடிக்கணக்கில் செலவிட்டும் அது ஒழுங்காததற்கு காரணம் இராணுவத்தில் ஏற்படும் ஊழல் தான் என்பது அதிர்ச்சி தரும் உண்மை
- உணவு உற்பத்தியில் நம் நாடு தன்னிறைவு அடைந்த பின்பும் ஒரிஸ்ஸாவில் பட்டினிச்சாவு என்பது ஏழைகளுக்கும் சென்று சேர வேண்டியது இடையில் சுரண்டப்படுவது தானே
- மக்கள் அன்றாடம் நடக்கும் சிறிய லஞ்ச ஊழலால் வெறுப்படைகின்றனர் இதுவே ஆட்சி மாற்றத்திற்கு காரணமாகிறது தேர்தல் சமயத்தில் குடிநீர் பிரச்சனைக்கும் , இருப்பிடத்திற்கும் தெரு விளக்குக்கும் , சாலை வசதிகளுக்கும் மட்டுமே முன்னுரிமை அளிக்கின்றனர்
- ஊழல் ஒழிப்புக்கு முன்னுரிமை கொடுத்தல் இந்த அடிப்படை வசதிகள் தானாகவே வந்து சேரும் என்பதை அவர்கள் உணரவில்லை

- உயர்ந்த இடத்தில் இருப்பவர் மிகப்பெரிய ஊழல் செய்து இருப்பினும் இடையில் அவருக்கு கிடைத்த சிறிய தண்டனையை அவருக்குப் பிராயச்சித்தம் என்று ஏற்றுக்கொண்டு அவரையே மீண்டும் தேர்வு செய்கின்றனர்
- லஞ்சத்தையும் மக்கள் சகித்துக் கொள்வதற்கு முக்கிய காரணம் இந்து தர்மத்தில் உள்ள பிராயச்சித்தம் கொள்கையாகும்
- ஊழலை ஒழிக்க விட்டால் ஏற்படக்கூடிய ஆபத்து குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த இங்கு யாவரும் முன்வருவதில்லை

**சமுதாயத்தில் ஊழல்**

- ஊழல் என்பது பொதுத் துறை இணை தனிமனிதன் தன் லாபத்திற்காக பயன்படுத்துவது. இது உலக வங்கியின் வரையறை. பொதுவாகச் சொன்னால் இது நிதி இன்மை, அறியாமை மற்றும் ஒழுக்கமின்மை போன்ற காரணத்தினால் ஏற்படும் நேர்மை குறைபாடு.
- இந்தியாவில் ஊழல், மோசடி இல்லாமல் எந்தத் துறையும் காணமுடியவில்லை என்றும் எந்தவொரு அலுவலை செய்து கொடுப்பதற்கும் லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று திரு. இந்திரகுமார் குஜ்ரால் பிரதமராக இருந்தபோது ஒரு தடவை மிகுந்த கவலையுடன் குறிப்பிட்டார்
- திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் ஒவ்வொரு ரூபாயும் வெறும் 14 காசுகள் தான் மக்களுக்கு சென்றடைவதாக முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கூறியுள்ளார்
- ஊழல் வரிசையில் இந்தியா உலகத்தில் ஐந்தாம் இடத்தில் இருக்கிறது ஆனால் சமூக வளர்ச்சியில் **127** ஆம் இடத்தில் தான்

உள்ளது இந்தியாவில் லஞ்சம் விளையாடும் பட்டியலில் தமிழகத்திற்கு 12 வது இடம் கிடைத்துள்ளது

- கல்வித்துறையில் 18 சதவீதம் பேர் முறையற்ற வழிகளிலேயே கல்வி நிலையங்களில்(குறிப்பாக தனியார் நடத்தும் மருத்துவ, பொறியியல் கல்லூரிகள்) இடம்பெறுகின்றனர்
- ஆய்வில் கலந்து கொண்டவர்களில் 50 விழுக்காடு பெயர் மின் துறையில் லஞ்சம் கொடுத்துள்ளனர். இதில் 67% இடங்களில் லஞ்சம் நேரடியாகவே கோரப்பட்டுள்ளது.
- நீதித்துறையில் சில சமயங்களில் நீதியைப் பெற அரசாங்க வக்கீல் மற்றும் எதிர்க்கட்சி வக்கீல் கூட லஞ்சம் கொடுக்க வேண்டியுள்ளது என்பதை இந்த ஆய்வு உறுதிப்படுத்துகிறது.

**நல்லொழுக்கம் இல்லாத கல்வி**

- ஒழுக்கம் இல்லாத கல்வி என்பது இருபக்கமும் வெட்டக் கூடிய கத்தி மாணவர்கள் தங்களை எல்லோரையும் விட உயர்ந்தவர்கள் என்றோ தாழ்ந்தவர்கள் என்று எண்ணுவது சரியல்ல இதைப் பயிற்றுவிக்கும் பொறுப்பு ஆசிரியரிடம் உள்ளது கல்வி நிலையங்கள் பணத்தை சம்பாதிப்பதை கற்றுத் தருவதை விட ஒழுக்கத்தை அதிகம் வலியுறுத்த வேண்டும்.
- நோக்கமே அறிவு வளர்ச்சியின் நோக்கமே நல்ல உறக்கத்தை வளர்த்துக் கொள்வதுதான் ஒழுக்கத்தை வெளிப்பாடுகளில் மயன் மட்டுமே செயல்படுத்த இயலாது சுயகட்டுப்பாடு ஒழுக்கத்திற்கு அவசியமாகும்.

- காந்தியடிகள் ஒவ்வொரு தனி மனிதனுடைய பொருளாதார தேவையினையும் உணர்ந்திருந்தார். எனவே தான், கல்வி தொழிற்கல்வி முறையினை கொணர்ந்தார். பொருளாதார தன்னிறைவு கல்வியின் பயன்களில் ஒன்றாக அமைதல் வேண்டும் என்றார்.
- தேசிய தொழிலான வேளாண்மை, குடிசை தொழில்கள் போன்றவற்றை மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். அவர்கள் தம் கால்களில் சுயமாக நிற்க இயலும் என்பது இவரது கருத்து.
- உனது பழக்கவழக்கங்கள், அதாவது நீ இயல்பாக அன்றாடம் செய்து வரும் காரியங்கள், உன்னை ஒரு சிறந்த மனிதனாக உருவாக்குவதற்கு பதிலாக, சீரழித்து கொண்டிருந்தால், ஒழுக்க நெறிகளில் இருந்து நீ விலகி விட்டாய் என்று பொருள்.
- சீரழிவு என்பது ஒரு நாளில் தெரிவது அல்லா நடப்பது நல்ல வழி போலவே தான் தெரியும். ஆனால் நடக்க நடக்கத்தான் ஆஹா.... இங்கேயா வந்து விட்டோம் என்று புரியும். நீ செய்கிற சில காரியங்களால் பிறருக்குத் துன்பம் ஏற்படுகிறது என்றால் அதுவும் ஒழுக்க இக்குழுமம் பக்கத்துல பக்கத்துல குறைவிற்கு அடையாளம்
- நாட்டின் கலாச்சாரத்தையும் பண்பாட்டை கல்வி வளர்த்திட வேண்டும் என்பது காந்திஜியின் தீவிரமான நம்பிக்கையாகும். பாரம்பரியத்தை மாணவரிடையே ஊட்டுதல் கல்வியின் நோக்கமாக இருத்தல் வேண்டும் என்றார்
- இன்றைய கல்வி முறையானது, மாணவர்களை அவர்களது வாழ்க்கைக்கு தயார் செய்யவில்லை
- தேசிய இலக்குகளையும், படிக்கிற நோக்கங்களையும் பிரதிபலிப்பதாக அமையவில்லை.

- அறிவு வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாமல், பட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது.
- தான் தெரிந்து கொண்டு உண்மைகளையும் செய்திகளையும் அறிவுபூர்வமாக பயன்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மாணவர்கள் மனப்பாடம் செய்வதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.
- மாணவர்களின் அறிவு தேர்ச்சியை தொடர்ந்து மதிப்பீடு செய்யாமல் இறுதி தேர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது
- தேர்வில் வெற்றி பெறுவதற்கான அனைத்து குறுக்கு வழிகளையும் பயன்படுத்துவதை ஊக்கமிழக்க செய்யும் நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை..

## Unjt V

5 marks

1. மனித உரிமைகள் என்றால் என்ன? அவைகளின் வகைகளை எழுதுக.
2. உலக மனித உரிமைகள் சாற்றுரை பற்றி குறிப்பு வரைக.
3. மனிதாபிமானச் சட்டம் என்றால் என்ன? இதுகுறித்து ஜெனிவா சாற்றுரை எழுதுக.
4. பெண்களுக்கு பொதுவாக மறுக்கப்படும் உரிமைகள் யாவை?
5. ஒப்பந்தத் தொழிலாளர் ஒழிப்பு முறைகான தீர்வுகளை எழுதுக.
6. பணியாளர் தேர்வாணையத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களை எழுதுக.
7. ஒப்பந்த தொழில் முறை குறித்த புள்ளி விவரங்களை பற்றி எழுதுக

1. What is human rights? Write the types of them.
2. Write short notes on world human rights declaration.
3. What is humanitarian law? Write A Geneva statement on this.
4. What are the rights generally denied for women?
5. Write solutions for bonded labour elimination.
6. Write the purpose and objectives of public service commission.
7. Write about statistical information in bonded labour?

10 marks

1. அடிப்படை மனித உரிமைகளாக கருதப்படுபவைகளைப் பற்றி கட்டுரை வரைக.
2. பெண்கள் உரிமை பற்றி விரிவாக எழுதுக.
3. குழந்தைத் தொழிலாளர்களின் தற்போதைய நிலை பற்றி கட்டுரை வரைக.
4. பணியாளர் தேர்வாணைய பணியமர்த்தலின் தேர்வுகள் மற்றும் செயல்கள் குறித்து கட்டுரை வரைக.

1. Write an essay about what is considered basic human rights.
2. Explain about women's rights.
3. Write an essay about current situation of child labour.
4. Write an article about the Recruitment and activities of public service commission.

5 marks

## மனித உரிமைகள் மற்றும் அவற்றின் வகைகள்

- மனிதர்கள், மனிதர்களாகப் பிறந்த காரணத்தினால் அவர்களுக்குக் கிடைத்த அடிப்படையான, விட்டுக் கொடுக்க இயலாத, மறுக்க முடியாத சில உரிமைகளை நாம் மனித உரிமைகள் என்று அழைக்கிறோம்.
- மனிதர்களுக்கு மனித உரிமைகள் மிகவும் முக்கியமான ஒன்றாக கருதப்படுவதால் சில நேரங்களில் மனித உரிமைகளை

அடிப்படை உரிமைகள் என்றும், இயற்கை உரிமைகள் என்றும், பிறப்புரிமைகள் என்றும் உள்ளார்ந்த உரிமைகள் என்றும் நாம் அழைக்கின்றோம்.

- டி.டி. பாசு அவர்கள் மனித உரிமைகளை வரையறுக்கும் பொழுது “ எவ்வித மறு பயனும் இன்றி மனிதனாக பிறந்த காரணத்தினாலேயே அரசிற்கு எதிராக ஒவ்வொரு தனிநபருக்கும் இருக்கக்கூடிய குறைந்தபட்ச உரிமைகளை மனித உரிமைகள்” என்று குறிப்பிட்டுள்ளார்.
- 1993ஆம் ஆண்டு வியன்னா நகரில் நடைபெற்ற மனித உரிமைகள் குறித்த உலக மாநாட்டில் பிரகடனத்தில்” மனிதனின் மதிப்பில் இருந்தும், கணையத்தில் இருந்தும் விளைவதே மனித உரிமைகள்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மனித உரிமைகளின் வகைகள்

மனித உரிமைகள் பொதுவாக பிரிக்கப்பட முடியாதவை. மேலும், அவை ஒன்றோடு ஒன்று சார்ந்து இருப்பவை. அதனால் பல்வேறு வகையான மனித உரிமைகள் அதனால் பல்வேறு வகையான மனித உரிமைகள் இருப்பதற்கு சாத்தியமில்லை. ஐநாவின் உறுப்பு நாடுகள் மனித உரிமைகளை ஐந்து வகைகளாக பிடித்தது.

- குடிமையியல்
- அரசியல் உரிமைகள்
- பொருளாதார உரிமைகள்
- சமூக உரிமைகள்
- கலாச்சார உரிமைகள்

**உலக மனித உரிமைகள் சாற்றுரை**

- இது ஒரு ஒப்பந்தம் அல்ல. எதிர்காலத்தில் இது உலகத்தின் சுதந்திரத்துக்கான பெரும் பட்டயம் ஆக உருவாகக்கூடும். 1949 ஆம் ஆண்டில் உலக மனித உரிமைகள் சாற்றுரை எசுப்பானிய மொழி பிரதியுடன் எலினோர் ரூஸ்வெல்ட்.
- உலக மனித உரிமைகள் சாற்றுரை என்பது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்ட கட்டுப்படுத்தாத ஒரு சாற்றுரை ஆகும்.
- 1949 ஆம் ஆண்டில் இச் சாற்றுரை உருவாக்கப்பட்ட அதற்கு இரண்டாம் உலகப் போரில் இடம்பெற்ற அட்டூழியங்களும் ஒரு காரணமாகும்.
- இது ஒரு கட்டுப்படுத்தாத சாற்றுரையாக இருப்பினும் தற்போதைய அனைத்துலக மரபார்ந்த சட்டத்தின் முக்கியமான கூறாக இது கருதப்படுகிறது.
- நாடுகளால் அல்லது பிற நீதித்துறைகளினால் பொருத்தமான வேலைகளில் இதனை பயன்படுத்த முடியும். விடுதலை, நீதி, உலக அமைதி என்பவற்றுக்கு அடிப்படையாக அமைபவை என்ற வகையில் சில மனித, குடிசார், பொருளாதார, சமூக உரிமைகளை முன்னெடுக்குமாறு உறுப்பு நாடுகளை இச் சாற்றுரை வேண்டுகிறது.
- நாடுகளின் நடத்தைகளை கட்டுப்படுத்தி அவற்றின் குடிமக்கள் பால் அவற்றுக்கு இருக்கக்கூடிய கடமைகளை செய்யுமாறு தூண்டும் முதலாவது உலக சட்டம் சார்ந்த முயற்சி இச்சாற்றுரை ஆகும்.

**மனிதாபிமானச் சட்டம்**

- 1864 ஆம் ஆண்டின் செனீவாச் சாற்று உரையின் மூலப்பிரதி. அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் நிறுவனரான என்றி துரந்த்தின் முயற்சிகளின் விளைவாக 1864 ஆம் ஆண்டுக்கும் 1907 ஆம் ஆண்டுக்கும் இடையில் செனீவாச் சாசனம் உருவானது.
- இச்சாசனம் ஆயுதப் போர்களில் ஈடுபடும் தனியாட்களை மனித உரிமைகளை பாதுகாக்கும் நோக்கத்தை உடையது.
- இது அனைத்துலகச் சட்டத்தில் போர்க் குற்றங்கள் என்பன தொடர்பான சட்டங்களை முறைப்படுத்துவதற்கான முதல் முயற்சியாக அமைந்த 1899, 1907 ஆம் ஆண்டுகளின் ஏக்சாசனங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.
- இரண்டாம் உலகப் போரின் விளைவாக இச்சாசனம் திருத்தப்பட்ட பின்னர் 1949 ஆம் ஆண்டில் மீண்டும் உலக சமுதாயத்தின் ஒப்புதல் பெறப்பட்டது.
- செனீவா சாசனம், இன்று மனிதாபிமானச் சட்டம் எனக் குறிக்கப்படும் சட்டத்தை வரையறுக்கிறது. அனைத்துலக செஞ்சிலுவை சங்க குழுவே செனீவாச் சாசனத்தை கட்டுப்படுத்தும் அமைப்பு ஆகும்.

**பெண்களுக்கு பொதுவாக மறுக்கப்படும் உரிமைகள்**

- உடல் மற்றும் மன சுதந்திரம்
- வேலை செய்ய உரிமை
- வேலையில் சரியான, சமமான ஊதியம் பெறல்
- சொத்துரிமை
- கல்வி பெற உரிமை
- இராணுவத்தில் பணியாற்றும் உரிமை
- சட்ட ஒப்பந்தங்கள் செய்திட உரிமை
- மணவாழ்வு, குழந்தை வளர்ப்பு மற்றும் சமய சுதந்திரம்

- இந்த உரிமைகளும் சுதந்திரங்களும் பெற மகளிருக்கும் அவர்தம் ஆதரவாளர்களும் போராடி வந்துள்ளனர். சில இடங்களில் சம உரிமை வேண்டி இன்னமும் போராடி வருகின்றனர்.

**ஒப்பந்த தொழிலாளர் ஒழிப்பு முறை காண தீர்வுகள்**

- ஒவ்வொருவருக்கும் ஒரு பொருத்தமான, உத்திரவாதமான வேலையை உறுதி செய்யக்கூடிய ஒரு சட்டத்தை நாம் கோரவேண்டும்
- கோடிக்கணக்கான தொழிலாளர்களுடைய வேலை, பதிவு செய்யப்படாத காரணத்தால் அவர்களுக்கு சட்டபூர்வமான உரிமைகள் மறுக்கப்படுகின்றன. எனவே எல்லா தொழிலாளர்களும் பதிவு செய்யப்பட வேண்டும்.
- ஊதியம் பெறும் எல்லா தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியம், ஓய்வூதியம் மற்றும் எல்லாப் பயன்களும் எவ்வித விதிவிலக்கும் இன்றி, உரிமையாக கிடைக்க வேண்டும். இவை எல்லாவற்றையும் கட்டாயமாக கிடைப்பதை சட்டம் உறுதி செய்ய வேண்டும்.
- சுரண்டல் இல்லாமல் முதலாளித்துவ அமைப்பு இயங்க முடியாது. சுரண்டலுக்கு முடிவு கட்டும் நோக்கத்தோடு தொழிலாளி வர்க்கம் ஒரு போராட்டத்தை தொடுக்க வேண்டும்
- வர்க்கப் போராட்ட கண்ணோட்டத்தோடு, தொழிலாளி வர்க்கம் தன்னுடைய அமைப்பை வலுப்படுத்த வேண்டும்.
- தொழிலாளி வர்க்க போராட்டத்தின் நோக்கமானது, முதலாளித்துவ அமைப்பை தூக்கி எறிந்துவிட்டு, தன்னுடைய சொந்த ஆட்சியை நிறுவுவதாக இருக்க வேண்டும்.

- தொழிற்சாலைகள், சுரங்கங்கள், நிறுவனங்கள் பன்னாட்டு நிறுவனங்கள், சேவைத் துறை போன்ற துறைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் நாம் அனைவரும், முதலாளித்துவ லாபத்தை உருவாக்கும் பொருளாதார போக்கை மாற்றுவதற்காக, நம்முடைய போராட்டத்தை தீவிரப்படுத்த வேண்டும்.
- உழைக்கும் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுடைய நல்வாழ்வை உறுதி செய்யும் நோக்கத்தை கொண்ட ஒரு புதிய பொருளாதார அமைப்பை நாம் நிறுவ வேண்டும்.

**பணியாளர் தேர்வாணையத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோள்கள்**

நோக்கம்

- இந்திய அரசமைப்பு சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளதற்கு இணங்க, சுதந்திரமானதும், பாரபட்சமற்றதும் ஒழுக்க நெறியின்பாற்பட்டதும், செயல்திறன் மிக்கதும், அரசு அன்றாடம் எதிர்கொள்ளும் புதிய சவால்களை சந்திக்கும் திறன் கொண்டது, பொதுமக்களின் வளர்ந்து வரும் எதிர்பார்ப்புகளுக்கு ஈடுகொடுக்கும் வகையிலும், குறிப்பாக விளிம்பு நிலை மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலும் ஆன திறன்மிக்க அரசு பணியாளர்களை உருவாக்கி வளர்த்து தேர்வாணையத்தின் முதன்மையான நோக்கம்.

குறிக்கோள்கள்

- தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் துணைகொண்டு, மாநில குடிமைப் பணிகளுக்கான தேர்வு முறை சுதந்திரமானதாகவும், நேர்மையானதாகவும், வெளிப்படையானதாகவும் இருப்பதை உறுதி செய்தல்.
- காலத்திற்கேற்ப தெரிவு முறைகளை மேம்படுத்துதல்
- அரசுப் பணியாளர்களின் பணி நிலைகள் குறித்து அவ்வப்போது அரசுக்கு தக்க ஆலோசனை வழங்குதல்
- அரசுப் பணியாளர்களின் நலன்களையும், நேர்மை திறனையும் தொடர்ந்து பாதுகாத்தல்.

**ஒப்பந்தத் தொழில் முறை குறித்த புள்ளி விவரங்கள்**

- 2008-09க்கும் 2012-13 க்கும் இடையில் ஒப்பந்தத் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை 39 சதவீதம் உயர்ந்தது.
- ஆனால் நிரந்தரத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 25% மட்டுமே உயர்ந்திருக்கிறது.
- துறைவாரியாக பார்க்கையில் ஒப்பந்த தொழிலாளர்களுடைய எண்ணிக்கை இக்காலகட்டத்தில், தொலைத் தொடர்புத் தொழிற்சாலைகளில் 60 சதவீதம், வாகன துறைகளில் 56%, கல்வித்துறையில் 54 சதவீதம், கட்டுமானத்துறையில் 52 சதவீதம், நுகர் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் ஐம்பத்தி ஒரு சதவீதம் என அதிகரித்திருப்பதை நாம் காணலாம்.
- தகவல் தொழில்நுட்பம் மற்றும் பிபிஓ துறைகளில் இந்த உயர்வு 42%, மருத்துவமனை சேவைகளில் 35%, மருந்து மற்றும் மருத்துவ சேவைகளில் 32% என இது அதிகரித்திருக்கிறது.

10 marks

**அடிப்படை மனித உரிமைகள்**

- அனைத்துலகச் சட்டத்தில் ஐக்கிய நாடுகளால் வெளியிடப்பட்ட உலக மனித உரிமைகள் சாற்றுரை கள் அடிப்படையாக பெரும்பான்மை நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- இந்த சான்றுரை குடிசார் அரசியல் உரிமைகளையும், பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகள் பற்றியும் எடுத்துரைக்கிறது.
- பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகள் என்ற சான்றுரையிலும் விரிவாக கூறப்பட்டுள்ளது.
- ஐக்கிய அமெரிக்காவின் உரிமைகளின் சட்டம், கனடாவின் உரிமைகள் சுதந்திரங்களுக்கான கனடிய சாசனம் போன்று பல்வேறு நாடுகளில் மனித உரிமைகளை வெளிப்படுத்தி சட்டங்கள் உள்ளன.
- வாழும் உரிமை
- உணவுக்கான உரிமை
- நீருக்கான உரிமை
- கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம்
- சிந்தனை சுதந்திரம்
- ஊடக சுதந்திரம்
- தகவல் சுதந்திரம்
- சமய சுதந்திரம்
- அடிமையாகா உரிமை
- சித்திரவதைக்கு உட்படா உரிமை
- தன்னாட்சி உரிமை
- ஆட்சியில் பங்கு கொள்ள உரிமை
- நேர்மையான விசாரணைக்கான உரிமை
- நகர்வு சுதந்திரம்
- கூடல் சுதந்திரம்

- குழும சுதந்திரம்
- கல்வி உரிமை
- மொழி உரிமை
- பண்பாட்டு உரிமை
- சொத்துரிமை

**பெண்கள் உரிமை**

- ஒவ்வொரு வருடம் மார்ச் மாதம் மனித உரிமை நாளும், பெண்கள் வலிமை நாளும் கொண்டாடப் பட்டு வருகிறது. உரிமை என்பது உறுதி செய்யப்பட்ட சுதந்திரம் ஆகும். ஆனால் பெரும்பாலோனோருக்கு என்னென்ன உரிமை பெற்றிருக்கிறார்கள் என்பது கூட தெரியவில்லை.
- அதிலும் பெரும்பாலான பெண்கள் படிப்பறிவு இல்லாததால் அவர்களுடைய உரிமையை நிலை நாட்டுவது இல்லை. சமுதாயம் என்பது பல சிறு குழுக்கள் கொண்ட ஒரு கூட்டமைப்பு ஆகும். சமூக விஞ்ஞானி ரோஸ்கோ பவுண்ட் என்பவர், ‘ பல குழுக்களை நடுநிலை குலையாது பாதுகாத்த அவசியம்' என்கிறார்.
- பல சமூகக் குழுக்களில் பெண்கள், குழந்தைகள், மூத்த குடிமக்கள், ஊனமுற்றோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பாதுகாக்கப்படவேண்டியவராவர்.
- இன்னொரு சமூக விஞ்ஞானி ராபர்ட் இங்கர்சால், ஒரு சமுதாயத்தில் பிரபலமான சாதனை படைக்கும் மனிதர்கள் உருவாக வேண்டுமென்றால் அந்த சமுதாயம் பெண்களுக்கு சுதந்திரம் கொடுத்த சமூகமாக இருக்க வேண்டும்.
- ஆண்களும் பெண்களும் சமுதாயம் என்று அழகு கட்டிடத்தை தாங்கிப்பிடிக்கும் பலமான தூண்களாகும்.. ஆனால் சமீப கால

சம்பவங்கள் பெண்களை தரம் தாழ்த்தி அழகு பார்க்கும் ஒரு நிலையாக உள்ளது.

- பெண்களின் உரிமைகள் என்பது அனைத்து வயதிலும் உள்ள பெண்கள், சிறுமியர் அனைவருக்குமான உரிமைகளையும் சுதந்திரங்களையும் குறிக்கிறது.

பொதுவாக மறுக்கப்படும் மகளிர் உரிமைகள்

- உடல் மற்றும் மன சுதந்திரம்
- வேலை செய்ய உரிமை
- வேலையில் சரியான சமமான ஊதியம் பெறல்
- சொத்துரிமை
- கல்வி பெற உரிமை
- ராணுவத்தில் பணியாற்றும் உரிமை
- சட்ட ஒப்பந்தங்கள் செய்திட உரிமை
- மணவாழ்வு குழந்தை வளர்ப்பு மற்றும் சமய சுதந்திரம்.

**குழந்தை தொழிலாளரின் தற்போதைய நிலை**

- குழந்தை தொழிலாளர் முறை உலகின் பல்வேறு பகுதிகளிலும் தொழிற்சாலை மற்றும் சுரங்கங்களிலும் உள்ளது. பாலியல்தொழில், குவாரி, விவசாயம், பெற்றோரின் தொழிலில் உதவுதல் மற்றும் சிறிய வணிகத்தில் குழந்தைத் தொழிலாளர்கள் ஈடுபடுகின்றனர்.
- சில குழந்தைகள் சுற்றுலா வழிகாட்டியாகவும் ஓட்டல் மற்றும் கடைகளில் வெயிட்டர்களாகவும் வேலை செய்கின்றனர்.
- யுனிசெப் அறிக்கையின்படி உலகம் முழுவதிலும் 5 முதல் 14 வயதுக்குட்பட்ட 158 மில்லியன் சிறுவர் சிறுமிகள் வீட்டு வேலை தவிர பிற வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

- ஐக்கிய நாடுகள் மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்புகள் குழந்தை தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டலை கவனத்தில் கொண்டுள்ளது.
- ஐநா குழந்தைகள் உரிமை பாதுகாப்பு உடன்படிக்கை 32வது விதியில் கூறப்பட்டுள்ளதாவது, அபாயகரமான தொழில்கள் அல்லது குழந்தைகளின் கல்வியை பாதிக்கும் தொழில்கள், குழந்தைகளின் உடல், மனம், பழக்கவழக்கத்தில் அபாயம் தரும் தொழில்கள் மற்றும் சமூக மேம்பாட்டை தடுக்கும் தொழில்களில் குழந்தைகள் ஈடுபடுவதை மாநில கட்சிகள் கண்டறிய வேண்டும். ஏற்கனவே உலகம் முழுவதிலும் 250 மில்லியன் குழந்தைகள் தொழிலாளர்களாக உள்ளனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.
- 1990 ஆம் ஆண்டுகளில் சோமாலியா மற்றும் ஐக்கிய நாடுகளை தவிர உலகில் உள்ள பிற நாடுகள் அனைத்தும் குழந்தைகள் உரிமைக்கான உடன்படிக்கையில் கையெழுத்திட்டன.
- சோமாலியாவை வழி நடத்தும் அரசாங்கம் இல்லாததால் தாமதமாக 2002ஆம் ஆண்டு சோமாலியா அந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டது.
- 1999 ஆம் ஆண்டு உலகளவில் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான ஓர் இயக்கம் உருவெடுத்தது. ஆயிரக்கணக்கான மக்கள் இந்த இயக்கத்தில் பங்கேற்றனர். 1998 ஆம் ஆண்டு ஜனவரி 17-ஆம் தேதி தொடங்கப்பட்ட இந்த இயக்கம் உலகத்தின் ஒவ்வொரு மூலைக்கும் சென்று அதிக அளவு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களையும் பங்கேற்க வைத்தது.
- ஆசியாவில் 61 சதவீதமும், ஆப்பிரிக்காவில் 32 சதவீதமும், லத்தீன் அமெரிக்காவில் 7 சதவீதமும், அமெரிக்காவில் ஒரு

சதவீதமும், கனடா, ஐரோப்பா மற்றும் செழிப்பான நாடுகளிலும் குழந்தை தொழிலாளர்கள் உள்ளனர்.

**பணியாளர் தேர்வாணையத்தின் பணியமர்த்தல் தேர்வுகள் மற்றும் செயல்கள்**

- குரூப்-4 தேர்வில்- பொதுத்தமிழ் மதிப்பெண்கள் குறைப்பு. குரூப் 2 தேர்வில் பொதுத்தமிழ் நீக்கம் குரூப்-2 தேர்வில் மூன்றடுக்கு முறை( முதல் நிலை, முதன்மை தேர்வு, நேர்காணல்) அறிமுகம்.
- குரூப் 1 முதன்மை தேர்வில் பாடங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்( டிஎன்பிஎஸ்சி) பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான பாடத் திட்டங்களை மாற்றி அமைத்துள்ளது.
- பல்வேறு போட்டித் தேர்வுகளில் தமிழ் மொழிக்கான முக்கியத்துவம் குறைக்கப்பட்டுள்ளது. பொது அறிவு பாடங்களுக்கான முக்கியத்துவம் அதிகரிக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் பொது அறிவு திறனையும் சிந்தித்து எழுதும் ஆற்றலையும் சோதனை செய்யும் வகையில் இந்த புதிய பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறுகிறார்கள்.
- பட்டப்படிப்பு தகுதியுடைய மாணவர்களுக்கான குரூப்-1 முதல்நிலைத் தேர்வில் தற்போது 3 தேர்வுகளுக்கான பாடத்திட்டம் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் இரண்டாவது தாளில் இந்திய அரசியலமைப்பு, இந்திய புவியியல், யூனியன் பிரதேசம் மற்றும் மாநில நிர்வாகம் குறிப்பாக தமிழ்நாடு மாநில நிர்வாகம் ஆகியவை குறித்த கேள்விகள் இருக்கும்.

- மாணவர்கள் விருப்பத்தின் அடிப்படையில், தமிழ் மொழி அல்லது ஆங்கில மொழித்திறன் பாடத்தை எழுத வேண்டும். குரூப்-1 நேர்முகத் தேர்வுக்கான மதிப்பெண்கள் 80 மதிப்பெண்கள் இருந்து 120 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- தற்போதைய புதிய முறைப்படி குரூப்-2 தேர்வு நேர்காணலுடன் கூடிய தேர்வு ( குரூப் 2), நேர்காணல் இல்லாத தேர்வு( குரூப் 2ஏ) என்று இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குருட்டு நேர்காணல் உடன் கூடிய தேர்வுக்கான முதல்நிலை தேர்வில் 100 கேள்விகளும் பொது அறிவு கேள்விகளாக இருக்கும். அதற்கு 300 மதிப்பெண்கள் வழங்கப்படும்.
- குரூப்-2 ஏ பிரிவு மாணவர்களுக்கு நேர்காணல் இருக்காது. இந்த குரூப் 2ஏ பிரிவு மாணவர்களுக்கான போட்டி தேர்வில் அப்ஜெக்டிவ் முறையில் பொது அறிவியல் 200 கேள்விகள் கேட்கப்பட்டு அதற்கு 300 மதிப்பெண்கள் வழங்கப்படும்.
- குரூப்-4 தேர்வில் தற்போது கொண்டுவரப்பட்டுள்ள புதிய முறைப்படி, ஜெனரல் ஸ்டடீஸ் எனப்படும் பொது அறிவு பகுதியில் 150 கேள்விகள் கேட்கப்படும். அதற்கு 225 மதிப்பெண்கள் உண்டு.
- தமிழ் வழியில் படித்த மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசு பணிகளில் 20 சதவீத இட ஒதுக்கீடு உள்ளது